Registered as a Newspaper பக்கங்கள்: 12 விலை ரூபா 6·00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 13 | 29-07-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 161

## புகைப்படம் சமர்ப்பித்து பரீட்சைக்கு தோற்றலாம்

அடையாள அட்டை கிடைக்காத மாணவர்கள் தமது புகைப்படத்தை சமர்ப்பித்து உயர்தரப் பரீட்சையில் தோற்றலாம் அரச அதிபர், அதிபர், கல்விப்பணிப்பாளர், மாகாண கல்விப்பணிப்பாளர் ஆகியோரால் இவை அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தாம் கற்ற (11ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்டத் தேர்தல்

# சர்வதேச தொண்டர் அமைப்பு கண்காணிப்பாளரை அனுப்புக

## தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடைபெறவுள்ள இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு தேர்தல் கண்காணிப்பிற்கென சர்வதேச தொண்டர் அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்களையாவது அனுப்பவேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள இன்றைய சூழ் நிலையில் சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதற்கான சூழ்நிலை இல்லை எனவும் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதை ஆயுதம் தாங்கிய குழுக்கள் தடுத்துவருவதாகவும் இது ஜனநாயக ரீதியான தேர்தலுக்கு அச்சுறுத்தல் ஆகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீசில்வாவிடம் முறையிடவுள்ளதோடுயாழ். மாவட்டத்தில் ராணுவத்தினரின்கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் பகுதிகளில் (11ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தலைக் கண்காணிக்க

## ஓய்வு பெற்ற படை அதிகாரிகள் தலைமையில் சுயேட்சைக்குழு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை கண்காணிக்கவென ஓய்வுபெற்ற படை அதிகாரிகளைக் கொண்ட சுயேட்சைக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாக ஓய்வுபெற்ற ஏயர்வைஸ் மார்ஷல் ஹரிகுணதிலக தெரிவித்துள்ளார்.

மக்களின் ஆதரவுடன் இப் பணியில் தாங்கள் ஈடுபட இருப்பதாகவும், இதற்கான நடவடிக்கைகளில் தற்போது இறங்கியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சுபீட்சமானதும், சுதந்திரமானதுமான தேர்தலை செயற்படுத்தவே இக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைதியானவாக்களிப்பை உறுதிப்படுத்துமாறும் அவர் படையினரையும், பொலிசாரையும் கேட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைத் தவிர்ந்த இடங்களில் கண்காணிப்பு பணிகளில் இக்குழுக்கள் ஈடுபடுமெனவும் (11ஆம் பக்கம் பார்க்க)

### சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின்

## பொ.ஐ.முவுக்கு எதிரான பிரசாரத்திற்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்படவுள்ள இத்தருணத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிராக நடந்து கொள்வது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவருக்கு எச்சரிக்கை செய்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்ன (11ஆம் பக்கம் பார்க்க)

## பொ. ஐ. மு. ஆதரவாளர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர் ஒருவர் இனம்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளார்.

அனுராதபுர மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 4மணியளவில் மேற்படி சம்பவம் நடைபெற்றதாகவும் இதில் கே. திலக்கரட்ன என்பவரே பலியானவர் எனக் கூறப்படுகிறது.

### பொதுஜன ஐக்கிய முன்னணியின்

## உயர் தலைவர்களுக்கு பாதுகாப்பளிக்கக் குழு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி, தனது உயர்மட்டத் தலைவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக குழு ஒன்றை அமைத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேசிய அமைப்பாளர் கேணல் அனுருத்த ரத்வத்த தலைமையில் இக்குழு செயற்படு (11ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை பிரதிநிதி நேற்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான ஜெனீவாப் பிரதிநிதி மாக்ஸ் கண்டோரன்ட், நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

இவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாண பிரதேசத்துக்குரிய செயற்பாடுகளை நேரில் பார்வையிடவுள்ளதாகதெரிய வருகின்றது.

பாதுகாப்பு வலயத்தில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலை மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதல் பற்றிய விசாரணைகளையும் இவர் மேற்கொள்வார்.

## ஊர்தி உரிமை மாற்றம் செய்வோர் கவனத்திற்கு

எதிர்வரும் 01-08-94 இல் இருந்து மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தினால் ஊர்திகள் உரிமை மாற்றம் செய்து கொடுக்கப்படவிருக்கின்றது. எனவே தமது ஊர்திகளை வேறு ஒருவருக்கு உரிமை மாற்றம் செய்யவிருக்கும் ஊர்தி உரிமையாளர்கள், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட பதிவுப் புத்தகத்துடனும் பதிவுப் பற்றுச் சீட்டுக்களுடனும், 'வரி அட்டை குடும்ப அட்டை என்பவற்றுடனும், ஊர்தியை கையேற்கவிருக்கும் புதிய (11ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



வீரவேங்கை ஜெனார்த்தன்

முல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் 'ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் (11ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரங்களுக்கு தீவுப்பகுதியில் இடையூறு

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிவிப்பு

தீவுப்பகுதிகளில் தாம் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதில் எதிர்நோக்கும் நெருக்கடிகள், வசதியீனங்கள் குறித்து ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர்கள் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இக்கடிதத்தில், தீவுப்பகுதியில் பிரசாரம் செய்ய கடந்த 26-ம் திகதி எமது கட்சியினர் சென்றிருந்தனர் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தவாறு எழுவைதீவு அனலை தீவுப் பகுதிகளுக்கு (11 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தம் உடன்தேவை

யாழ். போதனா வைத்தியசாலைக்கு சகல பிரிவிலும் இரத்தம் தேவைப்படுவதினால் இரத்ததானம் செய்ய விரும்பும் சகலரும் நோயாளர் நலன்புரி சங்கத்திடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## வரி விளம்பரம்

### தேவை

ஐரோப்பா நாடு ஒன்றில் நிரந்தர வசிப்பிடம் கொண்ட விடுமுறையில் வருகை தந்துள்ள 34 வயதுடைய 8ல் நட்பு பெற்ற செவ்வாயில் 8 பாவம் உடையவருக்கு மணமகள் தேவை. 28 வயதுக்கு உட்பட்டவராகவும் இந்து சமயத்தை சேர்ந்தவராகவும் இருப்பது நன்று. தொடர்பு வி.இல-340 மே/பா ஈழநாதம் யாழ்ப்பாணம் (8914)

### புரட்சிக்கிரகங்கள் ஒரே புள்ளியில்

தனுராசியில் யுரேனஸ், நெப்ரியூனுடனும், துலாராசியில் வியாழராகுவும் ஒரேபாகையில் (ஆவணி, புரட்டாதி, ஐப்பசியில்) சஞ்சரிக்கும்போதும் சனி பார்வையாலும் தேர்தல் வன்முறைகளையும் அரசியல் கொலைகளையும், கலவரங்களையும் உண்டாக்கும். சத்யா-கட்டுடை (8960)

### தவறிவிட்டது

24.07 94 அன்று 11 00 மணி 12.00 மணிக்கும் இடையில் உடுப்பிட்டிக்கும் கள்ளியங்காட்டுச்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தோர், ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8958)

### விசேட கலந்துரையாடல்

கோப்பாய் (உதவி அரச அதிபர் பிரிவு) பிரதேச நிர்வாக அலகிற்குட்பட்ட பகுதிகளில் வசித்து வரும் அரச உத்தியோகத்தர்களுக்கும் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நீர்வேலி அத்தியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல அரச உத்தியோகத்தர்களையும், சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களையும் கலந்து கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

### வழிபாட்டுநிகழ்வு

மாதா, பிதா, குரு, தெய்வ வழிபாட்டு நிகழ்ச்சியொன்று இன்று மாலை 3-00 மணிக்கு மெமோறியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## நினைவு கூருகின்றோம்...

### 29-07-1994...

1985-ம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா - பண்டாரிக்குளம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**லேடிபாலா-பாலன்** (பொன்னையா லலித்குமார்-பண்டாரிக்குளம் - வவுனியா)

1987 -ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

★ **சுமந்த** (பந்தக்குட்டி நாகேந்திரம் - பூநகர், மூதூர் - திருமலை)

★ **வயிரவன்-காளிராசா** (மாவடிச்சேனை, வெருகல் - திருமலை)

மட்டு - வந்தாறுமூலையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கெதிரான சுவரொட்டிகள் கொண்டு செல்கையில் சிறிலங்கா அதிரடிப்படையினர் சுட்டதில் வீரச்சாவெய்திய,

**குமார்** (முருகேசு சந்திரகுமார் - வந்தாறுமூலை-மட்டு)

1988 -ம் ஆண்டு மன்னார் - அடம்பன், ஆட்காட்டிவெளிப் பகுதியில் இந்தியப் படையிருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் எட்வின்** (சூசைப்பிள்ளை அன்ரன் ஜோய்-பள்ளிமுனை - மன்னார்)

1989 -ம் ஆண்டு முல்லைத்தீவு - 3-ம் கட்டைப் பகுதியில் அமைந்திருந்த இந்தியப்படையினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் ஜேசுதாஸ்** (வீரகத்தி விக்னேஸ்வரன் - சற்குளம், நெடுங்கேணி - மணலாறு)

**லெப். அன்சார்** (சீவரத்தினம் சிவரூபன் - கண்டி வீதி, பரந்தன் - கிளிநொச்சி)

மட்டு - படுவான்கரைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

திருமலை - மூதூர், மல்லிகைத்தீவுப் பகுதியிற் சிறிலங்கா ஊர்காவல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 14 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு யாழ் கோட்டையில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். சிறி** (கிருஷ்ணமூர்த்தி ஹரிபத்மநாதன் - புது வீதி, அத்தியடி - யாழ்)

**அகஸ்ரின்** (அ. செல்வராசா - யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 -ம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின் போது தடைமுகாம் மீது 2-வதுதடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**அலிஸ்ரன்** (தியாகராசா கிருஷ்ணபாலன் - 4-ம் கிராமம், சென்றல்காம் - அம்பாறை)

**லெப். சதீஸ்** (கணபதிப்பிள்ளை புஸ்பராஜன்-ஆலங்கேணி, கிண்ணியா - திருமலை)

**லெப். ரூபன்** (கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் - ஐயனார்திடல், தம்பலகமம் - திருமலை)

**லிங்கேஸ்** (வன்னியசிங்கம் ஜவன் ஜெயராஜ் - உப்புவெளி - திருமலை)

**ரூபிகா** (வினோதா வேலாயுதபிள்ளை- நெடுங்கேணி - மணலாறு)

**லெப். தயாளன்** (சிவகுரு மோகனசுந்தரம்-அலைக்கல்லுப்போட்டகுளம்-வவுனியா)

**கஜந்தா** (இந்திராணி மணியம் - இரணைமடு - கிளிநொச்சி)

**குருபரன்** (ஆறுமுகம் பாலையா-எட்டியாந்தோட்டை -மலையகம்)

**கப்டன் கோபி** (கந்தையா பேரின்பமூர்த்தி - 6 - ம் வட்டாரம், வேலணைத்துறை-யாழ்)

**கப்டன் அகிலன்** (வேலன் மோகனசிறி-உதயநகர், கைதடிமேற்கு-சாவகச்சேரி-யாழ்)

**கப்டன் வண்டு** (சுப்பிரமணியம் யோகேஸ்வரன்-உடுத்துறை, தாளையடி-வடமராட்சி)

**லெப். கர்ணன்** (தவரத்தினம் வெஸ்லி தவேந்திரன்-1-ம் கட்டை, தம்பசிட்டி-பருத்தித்துறை)

**2-ம் லெப்.றெனோ** (ஜெயசிங்கம் பேனாட் மதியழகன் - நுணாவில் கிழக்கு-சாவகச்சேரி)

**2-ம் லெப்.செனித்** (குமாரசாமி திருவேரகன்-ஏழாலை மத்தி-யாழ்)

**யோகன்** (சின்னத்துரை கண்ணன்-சுழிபுரம் கிழக்கு-யாழ்)

**நளா** (லலிதாதேவி நடராசா - புங்குடுதீவு மேற்கு-யாழ்)

**வேல்விழி** (தங்கேஸ்வரி இராசமாணிக்கம் - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை-யாழ்)

1992-ம் ஆண்டு மட்டு - ஆலங்குளச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். ரவிக்குலன்-மதன்** (சின்னத்தம்பி அருமைநாதன்-வாழைச்சேனை-மட்டு)

மட்டு-இருதயபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**செல்வராஜ்** (சிவராஜா பாலச்சந்திரன் - இருதயபுரம்-மட்டு)

மட்டு-சின்னஊறணிப் பகுதியில் சிறிலங்கா விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியான தமிழ்ப் பொதுமகன். தாளங்குடா -ஏறாவூர்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்ட 03 தமிழர்கள்.

1993-ம் ஆண்டு மன்னார்-கறிசட்டி பாலத்தடியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச் சமரில் வீரச்சாவெய்திய,

**மேஜர் றேமன்** (வேலுச்சாமி மூர்த்தி- ஆண்டாங்குளம், அடம்பன்-மன்னார்)

**கப்டன் றேகன்-ஈழவன்** (சிந்தான் சிறில் மரியநாயகம்-உயிர்த்தராசன்குளம்-மன்னார்)

**லெப்.தும்பன்** (மதுரலிங்கம் உக்குள்குமார்-செம்மண்தீவு, முருங்கன்-மன்னார்)

**எழில்வேந்தன்** (கந்தசாமி சதீஸ்குமார்-ஏழாலை-யாழ்)

மட்டு-பாலைமடுப்பகுதியிற் சிறிலங்கா இராணுவம் சுற்றிவளைத்த போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.வேங்கையன்** (தர்மராசா சந்திரகுமார்-வந்தாறுமூலை-மட்டு)

**மாணிக்கராஜ்-கிருஷ்ணா** (தங்கவடிவேல் இராகிருஷ்ணன், சின்னப்புல்லுமலை-மட்டு)

**2-ம் லெப்.நிரோசன்** (சரவணமுத்து வடிவேல்-கிண்ணியடி, வாழைச்சேனை-மட்டு)

இதே சம்பவத்தின்போது கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான ஒருவர்,

கிளாலிக் கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்த பயணிகள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்திலும், அடித்தும், குத்தியும் கொல்லப்பட்ட 05 பெண்கள் உட்பட 09 பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக் குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9992)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



அன்னை மடியில்
1938-12-28

ஆண்டவன் அடியில்
1994-06-29

### செல்வி சின்னத்தம்பி அன்னலட்சுமி

அன்பு பொழிந்த சோதரியாய்
அறிவு புகட்டிய அன்ரியாய்
படிக்க என்று பள்ளி யனுப்பி
பாதி வழியில் வந்து நிற்பீர்
மயக்க வடிவில் வந்த காலன்
கவர்ந்து சென்றான் உம்முயிரை.

அநாதைகள் ஆகி நாம் அல்லல் உறுகிறோம். அவனியிலே வருஷங்கள் பல சென்றாலும் வாடாது உங்கள் நினைவு தான். நீங்கள் பேரின்பத்தில் என்றும் நிலைத்து அடைக சாந்தி சாந்தி சாந்தி.

ஈமக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-- சகோதரன்

சங்கத்தானை,
சாவகச்சேரி. (8951)


சஞ்சிகை நடத்தும்

**மதுர விழா**

★ வழக்காடு மன்றம் ★ நாடகம் ★ தாளலயம்

வாழ்த்துவோர்:

**P. I. பர்னான்டோ**



(கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்குவதிலும் பல் கட்டுவதிலும் நீண்டகால அனுபவமுடையவர்கள்)



(சி-10000)

நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் நூலகம்,

# வரலாறு காணாத மனிதப் பேரழிவினைச் சந்திக்கும் றுவாண்டா

பாலகுமாரன்

வரலாற்றின் சக்கரங்கள் இப்போது வெகு வேகமாக றுவாண்டாவில் சுழல்கின்றன ஒன்றிற்குப் பின் ஒன்றாக சடுதியாக அங்கு நடந்தேறும் நிகழ்வுகள் பிரமிப்பை ஏற்படுத்துகின்றன. ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட துட்சியின மக்கள் கோடரிகளாலும், கொடுவாக் கத்திகளாலும் வெட்டிச் சாய்க்கப்பட்ட போது தடுக்க முடியாமல் தயங்கி நின்றது இவ் உலகம்; இப்போதோ றுவாண்டாவின் அருகில் சயர் நாட்டு எல்லைப்புறத்தில் வரலாறு காணாத இன்னொரு அவல நிகழ்வு கண்டு பதைபதைக்கின்றது. அலை, அலையாக மனிதக் காடுகளாக சயரின் எல்லைப்புற கோமா (GOMA) பகுதியில் வந்து குவியும் கூட்டு இன அகதிகளை எவ்வாறு பராமரிப்பது என்று தெரியாமல் இன்று உலகம் தடுமாறுகின்றது. இரண்டு மில்லியன் தொகையை அண்மித்து விட்ட இம் மக்கள் சொட்டு நீருக்காக அலை அலையாக அலைந்து அல்லல்படுவது சகிக்க முடியாத வேதனை தரும் காட்சியாகின்றது. எரிமலைக் குழம்புஇறுகியபாறைகளான மேற்புறத்தைக் கொண்டுள்ள கோமாவில் தண்ணீர் என்பது மருந்துக்கும் கிடைக்காத நிலையில் கொடிய வாந்திபேதியால் இம் மக்கள் மாய்ந்து விழுவதை சி. என். என். தொலைக் காட்சியில் பார்த்தோர் கதிகலங்குகின்றனர். சென்ற புதன்கிழமை வரையில் மட்டும் சுமார் 15,000 பேருக்கு மேல் இந்நோய் பலி கொண்டு விட்டது. உடனடியாக ஒரு லட்சம் பேர் பாதிக்கப்படும் நிலை; அத்தோடு நோய் காவிகளாக மாறிவிட்ட மக்கள் சயரின் இப்பகுதி வாழ் 60 இலட்சம் மக்களுக்கும் பெருத்த ஆபத்தை உருவாக்குகின்றனர். மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டோர் உதவி கேட்டு கதறுகின்றனர். சிற்றமுற்று கண்டிக்கின்றனர். உலகம் செய்ததோ மிகக்குறைவு. செய்யும் உதவியும் மிகக்காலம் தாழ்த்திய உதவி என வழமைக்கு மாறாக பி. பி. சி. முகவரே காட்டமாக கண்டிக்கின்றார்; வரலாறு காணாத மனிதப் பேரழிவு என்பதே இன்று றுவாண்டாவில் நடப்பதைக் குறிப்பதாகிவிட்டது.

என்ன நடக்கின்றது என்று சிந்திப்பதற்கே அங்கு இன்று வழியில்லாத நிலை உருவாகி விட்டது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் நாடாகி விட்டது றுவாண்டா. 1950 களிலிருந்தே கூட்டு இனத்தாரின் படுகொலைகளிலிருந்து தப்ப உகண்டா சென்ற துட்சி மக்கள் இப்போது தாயகம் திரும்பும் வேளை - தாம் பழி வாங்கப்படலாம் என்கிற பயத்தில் கூட்டு இன மக்கள் அகதிகளாக வெளியேறுகின்றனர். சமகால நிகழ்வு இது. 1960, 1973-ம் ஆண்டுகளில் நடைபெற்ற படுகொலைகளிலிருந்து தப்பி உகண்டாசென்ற அகதி மக்களிலிருந்தே R.P.F எனப்படும் றுவாண்டாதேசப்பற்றாளர் முன்னணி எனப்படும் துட்சி இனப்போராளிகள் அமைப்பு தோற்றம் பெற்றது 1990-ம் ஆண்டளவில் றுவாண்டா திரும்பிய 15,000 பேரைக் கொண்ட இப் போராளி அமைப்பு, 40,000 பேரைக் கொண்டதும், பிரான்சினால் பயிற்றுவிக்கப்பட்டு ஆயுதம் வழங்கப்பட்டு வளர்க்கப்பட்டதுமான கூட்டு அரச படையை தோற்கடித்து இன்று ஆட்சியைக் கைப்பற்றி விட்டது.

படிப்படியாக போராளிகள். முன்னேறவே தலைநகர் கிகாலியை விட்டு நகர்ந்த கூட்டு இன அரசு றுவாண்டாவில் மேற்குப்பகுதியைமிருசிய கட்டுப்பாட்டு பகுதியாக கொண்டிருந்தது. ஆனால் இப்போதோ அங்கிருந்தும் இவர்கள் தப்பியோடி சயர் செல்வதோடு, கூட்டு இன மக்களையும் அச்சுறுத்தி சயர் நாட்டிற்கு தப்பியோடுமாறு தூண்டி விட்டதன் விளைவே இன்றைய சயர் எல்லையில் தோன்றிய சிக்கலுக்கு காரணமாகி விட்டது.

அத்தோடு மிக வித்தியாசமான போக்கினைக் கொண்ட R.P.F என்ன செய்வார்கள் என்கிற சங்கதி எப்போதும் அறிய முடியாத ஒன்று. இம்முறை துட்சியினப் போராளிகள் மிதவாத கூட்டு இன தலைவர்களையே சனாதிபதியாகவும் பிரதம மந்திரியாகவும் நியமித்து கூட்டு இன மக்களை பழி வாங்கோம் என உத்தரவாதம் அளித்து மக்களை நாடு திரும்புமாறு வேண்டுகோள் விடுத்த வண்ணமேயுள்ளனர். இவர்களது இத்தகைய இராசதந்திரப் போக்கு பெருத்த வியப்பை உலக அரங்கில் ஏற்படுத்தியதோடு ஐ.நா.வோடு தனது அமைதிப்படையை எல்லைக்கு நகர்த்தி மக்களை றுவாண்டா திரும்புமாறு வற்புறுத்தத் தொடங்குகிறது.


> சில வாரங்கட்கு முன் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தனது துட்சிமக்களை இழந்தது றுவாண்டா. இப்போதே 10 இலட்சத்திற்கு மேற்பட்ட கூட்டு மக்கள் வாந்தி பேதி நோயால் பாதிக்கப்படும் ஆபத்தை எதிர்நோக்கத் தொடங்குகின்றது. ஏற்கனவே 15,000 பேரை இழந்து விட்டது. 1 இலட்சம் பேர் இந் நோயால் ஏற்கெனவே பாதிப்புக்குள்ளாகத் தொடங்கி விட்டனர் -

ஆனால் இதைவிட இன்னொரு புதிய சிக்கல் இப்போது தோன்றுகின்றது இம் மாதத் தொடக்கத்தில் ஐ நா வோடு கலந்தாலோசிக்காமலே பிரான்சு தனது 2500 பேர் கொண்ட படையணியை மனிதாபிமானப் பணிக்காக றுவாண்டா அனுப்பப் போவதாக கூறிய போது இச்சிக்கல் முளைவிட்டது. பிரான்சியப் படை சயர் நாட்டின் தளங்களிலே தங்கியிருக்கின்றது. பிரான்சின் முன்னைய தலையீடுகள் எப்போதுமே ஆபிரிக்காவின் விவாதத்திற்குரியவை. எனவே இப்போதோ சயர் நாட்டிற்குள் தப்பியோடியுள்ள கூட்டு இனக் கொலைக் குழுக்கள், அரச படையாளர் அடுத்து என்ன செய்யப் போகின்றார்கள் என்பது அடுத்த சிக்கலாகி விட்டது. புதிய றுவாண்டா அரசோ இவர்கள் இனப் படுகொலைக்காக சர்வதேச மன்றில் விசாரித்து தண்டிக்கப்பட வேண்டியவர்கள் எனக் கோரி வருகின்றது. இரண்டு தினங்கட்கு முன் புதிய றுவாண்டாவின் சனாதிபதி சயர் நாட்டு சர்வாதிகாரி மொபுட்டுவை சந்தித்து கூட்டு இனப் படையின் ஆயுதங்களை உடனே களையுமாறு கோரியுள்ளார். இத்தகைய நிலையிலேபிரான்சின் நிலை எத்தகையது என்கிற கேள்வி எழுந்துள்ளது.

பிரான்சின் முன்னைய ஏகாதிபத்தியம் ஆபிரிக்கப் பகுதிகளில் பரவியதையடுத்தும் இப்போது முன்னைய ஏகாதிபத்தியக் கனவின் தொடர்ச்சியாக குறிப்பாக மத்திய ஆபிரிக்க நாடுகளில் பிரான்சு விசேடித்த கவனம் கொண்டிருப்பதும் தெரிந்ததே. அங்கெல்லாம் பிற்போக்கு சர்வாதிகார ஆட்சியாளர்க்கு ஆபத்து ஏற்பட்ட போதெல்லாம் பிரான்சு படை அனுப்பி காப்பாற்றும் பணியை தொடர்ந்து வருகின்றது. இதற்காக பிரான்சிய மொழி பேசுவோர் இது தமக்கு அக்கறையிருப்பதாக கூறிக் கொள்கிறது. 1960ன் பின் இவ்வாறாக9 தடவைகட்கு மேல் பிரான்சு ஆபிரிக்க விவகாரங்களில் தலையிட்டுள்ளது. அதுபோலவே கூடுதலாக பிரான்சு பேசும் கூட்டு இன மக்களின் அரசுக்கு றுவாண்டாவின் பிரான்சு உதவி வந்துள்ளது. குறிப்பாக 1990-ம் ஆண்டின் பின் கூட்டு இன சனாதிபதியாக இருந்த காபியாரிமானாவின் அரசுக்கு இராணுவத் தளபாடங்களை மட்டுமின்றி இராணுவப் பயிற்சிகளும் பிரான்சால் வழங்கப்பட்டது. அது மட்டுமன்றி பிரான்சில் இராணுவ ஆலோசகர்கள் றுவாண்டாவில் தங்கியிருந்து R.P.F போராளிகளின் நோக்கிய முன்னேற்றத்தை தடுப்பதற்காக முயன்றதும் பல தடவைகளில் போர்க்களங்களில் நேரடியாக பங்கு பற்றியதும் ஒன்றும் இன்று இரகசியமல்ல.

இது மட்டுமன்றி இப்போது இன்னொரு அதிர்ச்சி ஊட்டும் தகவலும் வெளியாகியுள்ளது. அண்மையில் நடந்தேறிய துட்சி இனப் படுகொலைகள் சனாதிபதி காபியாரிமானா கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் முகமாகவே மேற்கொள்ளப்பட்டதாக முன்னர் நம்பப்பட்டது ஆனால் இப்போதோ சனாதிபதி விமான வெடிப்பில் கொல்லப்படு முன்னரே துட்சி மக்களைக் கொல்லத் திட்டமிடப்பட்டது அம்பலமாகியுள்ளது. இக்கொலைக் குழுக்களின் தலைவனான றொபேட் கவுகா (Robert Kavuga) என்பவனும் கூட்டு இராணுவ அதிகாரியான லெப். கேணல் பகசோரா (Bagasora) என்பவனும் இணைந்து துட்சி மக்களை அடையாளம் கண்டு செய்யப்பட வேண்டிய வழிகள் பற்றியும் றுவாண்டா எங்கும் இதற்கென குழுக்களை உருவாக்கி அவர்களுக்கு கத்தி, கைக்குண்டுகள் போன்றவற்றை விநியோகிக்கும் முறைகள் பற்றியும் ஏற்கனவே திட்டமிட்டது தெரியவந்துள்ளது இங்குள்ள சிக்கல் என்னவென்றால் இத்தகைய கொலைக்குழுக்கட்கும் பிரான்சின் இராணுவ ஆலோசகர்கள் பற்றி அறிந்ததாக இப்போது நம்பப்படுவதுதான்.

எனவேதான் இம் மாதத் தொடக்கத்தில் பிரான்சியர் தன்னிச்சையாக படை வீரர்களையும் கவசவாகனங்களையும்உலங்குவானூர்திகளையும் மிராஜ்ஜகுவார்போர்விமானங்களையும் சயருக்கு அனுப்பிய போது உலக அரங்கிலே சந்தேகம் துளிர்த்தது. அது மட்டுமன்றி றுவாண்டாவின் கூட்டுமக்களும் அரசினரும் தங்களின் நண்பனான பிரான்சு தங்களை இக்கட்டிலிருந்து காப்பாற்றவே வருவதாக மகிழ்ந்து பிரான்சியப் படைக்கு பெருத்த வரவேற்பு அளித்தனர். கூட்டுப் படைகளுக்கு புதிய உற்சாகம் கிடைத்ததாக இராசதந்திரிகளே குறிப்பிடுகின்றனர். எனவேதான் துட்சியின தலைவர்களே ''இது ஒரு அப்பட்டமான ஆக்கிரமிப்பு'' என தமது எதிர்ப்பை தெரிவித்தனர். எனினும் பிரான்சியப் படை பின்னர் ஐ.நாவின் அங்கீகாரத்தைபெற்றதும் மேற்கு றுவாண்டாவில் கூட்டு இன கொலைக் குழுக்களிடம் சிக்கிய சிய துட்சி மக்களை மீட்டதாலும் R.P.F நேரடிமோதலை தவிர்த்துக்கொண்டது. எனினும் கூட்டு அரச படையினரிடம் மிருசிய மேற்கு றுவாண்டா பகுதியில் பிரான்சியர் பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்தியதும் அங்கு பெருமளவு கூட்டு மக்கள் மட்டுமன்றி கூட்டு அரச இராணுவமும்கொலைக்குழுக்களும்தங்கியமையையும் இவ்வலயத்துள்போராளிகள் பிரவேசிக்க முடியாதுஎன்றதும் பிரான்சியரின் நோக்கத்தை தெளிவாக்கின எனவேதான் R.P.F தளபதி போய்க்காமே ''இது மேது நாடு; நாம் எங்கும் எபாய் வருவோம்; தடுப்பார் எவராவது தடுத்துப்பார்க்கட்டும்'' என்றார்,




பிரான்சியரின் நோக்கத்தை முறியடிக்க ஒரே வழி தமது போராட்டத்தை விரைவுபடுத்துவதுதான் என உணர்ந்த துட்சி போராளிகள் மிக முனைப்பாக தமது தாக்குதல்களை தொடுத்தனர். பலன் முதலில் கிகாலியும் பின்னர் புட்டாரே போன்ற முக்கிய நகரங்களும் கூட்டு இன தற்காலிக அரசு இயங்கிய கித்தாராம நகரமும் அவர்கள் வசமாகியது. அத்தோடு போராளிகள் மெதுவாக மேற்கு றுவாண்டாவைநோக்கியும் முன்னேறினர். அத்தோடு தமது அரசையும் பிரகடனப்படுத்தவே பிரான்சின் நிலை இக்கட்டுக்குள் தள்ளப்பட்டது. தாம் மனிதாபிமானபணிக்கேவந்ததாக வலியுறுத்திய பிரான்சு ஆகஸ்ட் மாத முடிவிற்குள் தாம்வெளியேறப்போவதாக இப்போது அறிவித்து விட்டனர். அத்தோடு போராளிகள் முன்னேறவே அச்சங் கொண்ட கூட்டு மக்களும் இராணுவத்தினரும் பாதுகாப்பு வலயத்திலிருந்து நகர்ந்து சயர் நாட்டுக்குள் செல்கின்றனர். இப்போது துட்சியினப் போராளிகளின் நுணுக்கமான கையாளுகை பிரான்சை மேற்கொண்டு தனது தலையீட்டை தொடர முடியாமல் செய்து விட்டது. எனவே இப்போது பிரான்சின் வெளிநாட்டமைச்சர் ''இனப்படுகொலை நடந்தாலும் றுவாண்டா ஒரு பல்லின நாடாக மிருசியினருக்கும், துட்சிகள் கூட்டுக்களும் தமக்கிடையில் நேர்மையான அதிகாரப் பங்கீட்டைச் செய்ய வேண்டும் என்றும் அரசியல் தீர்வே றுவாண்டாவிற்கு உள்ள ஒரேவழி'' என்கிறார் அத்தோடு பிரான்சு தனது தலையீட்டுக்கு பல சாட்டுக்களை இப்போது கூறி வருகின்றது. ''ஒருகுழந்தையாவது காப்பாற்றப்பட்டாலே தாம் தலையிட்டதற்கு பெறுமதியானது'' என்று பிரான்சின் அமைச்சரொருவர் குறிப்பிட்டார், இவற்றை விட சனாதிபதி மித்தராண்டின் பதவிக்காலம் விரைவில் முடிய இருப்பதாலும் வரலாற்றில் தன் பெயரை இடம்பெறச்செய்ய கிளின்டனால் செய்ய முடியாததை தான் செய்து விட்டதாக பதிவு செய்யும் நோக்கிலே இத் தலையீடுகள் செய்யப்பட்டதாக இன்னொரு ஆய்வாளர் குறிப்பிட்டார்.

எதுஎப்படியிருந்த போதும் றுவாண்டாவில் விடை காணாத பல வினாக்கள் இன்று எஞ்சியுள்ளன. சயரில் உள்ள கூட்டு மக்களின் எதிர்காலம் என்ன? அவர்கள் முழுமையாக நாடு திரும்புவார்களா? துட்சி மக்கள் பழி வாங்கலில் ஈடுபட மாட்டார்களா? வாந்தி பேதி நோயின் தாக்கத்திலின்று இம் மக்கள் தப்ப வழியுண்டா? இனிமேலாவது இத்தகைய பேரழிவுகள் ஏற்படுவதை உலகம் விரைந்து செயற்பட்டு தடுக்குமா? இத்தகைய கேள்விகட்கு சாதகமாக பதில் கிடைக்கும் வரை றுவாண்டா நிலை எத்தகையதாக இருக்கும் என்பதே கேள்விக் குறிதான். ஏனென்றால் தமது கோரிக்கைகள்நிறைவேற்றப்படும் வரை(அதிகாரப் பகிர்வு) கூட்டு மக்களை றுவாண்டா திரும்ப வேண்டாம் என அவ்வினத்தலைவர்கள் இப்போது தடுத்து வருகின்றார்கள். தாம் மீண்டும் கெரில்லாப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக சயரிலிருந்து இத் தலைவர்கள் கூறி வருகின்றார்கள்.

இத்தகைய பல சிக்கட்கு மத்தியிலும் றுவாண்டா தேசப்பற்றாளர் முன்னணியின் போராட்டமும் அவர்களது அரசியல் கையாளுகை முறையும் இன்று உலகால் மதிக்கப்படுகின்றன. தனது மக்கள் நலனுக்காக எத்தகைய அழுத்தங்கட்டும் இடம் கொடாது அவர்கள்போராடி வெற்றி கண்டதும் துயரங்களைக் கண்டு துவண்டுவிடாது போராடியதும் இன்று மற்றவர்களை பட்டறிவாக்கி விட்டது.

# தேர்தல் ஆயுதமாகிவிட்ட வன்முறை; டி. பி. கையாளப் போவது எவ்வாறு?

சிறிலங்காவின் பொதுத்தேர்தலுக்கு இன்னும் பதினேழு நாட்கள் மட்டுமே உள்ளநிலையில் இறு தியான தேர்தல் பிரசாரக் களத்தில் பிரதான இரு கட்சிகளும் வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் சூடான விதத்தில் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றன. தமிழர்களின் தாய கப் பகுதியான வடக்கு-கிழக்கு மாகாணப் பகுதி யில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சிறிய பகுதியில் ஒரு சில சிறிய குழுக்கள் தேர்தல் கூட்டங்கள் நடத்துவதில் அக்கறையும் காட்டி வரு கின்றன.

தேர்தல் என்றால் இப்படித்தான் நடக்க வேண்டும் என்ற வரையறை ஒரு காலத்தில் இரு ந்ததுண்டு. இன்றைய காலத்தில் எப்படியும் தேர் தல் நடத்தப்படலாம் என்பது போன்ற தொரு கேலிக் கூத்தான நிலையே உருவாகியுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவம் என்ற நிலை மாற்றப் பட்டு சில பாராளுமன்றம் செல்வதற்கான சூழ் நிலையில் தேர்தலை நடத்துவதற்கான வித்தைகள் தற்போது கையாளப்பட்டு வருகின்றது. அண்மை யில் நடந்து முடிந்த தேர்தலிலும் சரி தற்போ தைய தேர்தலிலும் சரி கட்சிகள் நடந்து கொள் ளும் முறை இதையே எடுத்துக் காட்டுகின்றது. ஒரு சிலநூறு வாக்குகளுடன் பத்தாவது பாராளு மன்றத்தில் இடம்பிடித்து விடக் கூடிய நிலையே தற்போது காணப்படுகின்றது.

மேலும் தேர்தல் நடத்தப்பட முடியாத அள வுக்கு அரசாங்கம் கட்டுப்பாட்டை இழந்துள்ள பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தற் போது வதியும் மாவட்டங்களிலேயே வாக்காளர் களாக கருதப்படுவதே தேர்தல் மரபு. ஆனால் இம் மரபு மாற்றப்பட்டு முன்பு வாழ்ந்த மாவட் டங்களின் வாக்காளர்களாக குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப்பின்னரும் கருதப்படும் என்ற விசித் திரமான நிலை இப்போது உருவாக்கப்பட்டு உள்ளது. இதே போக்கில் இன்னும் சில ஆண்டு கள் சென்றால் வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் கூட அந்தந்த நாடுகளிலுள்ள சிறிலங்காத் தூதுவ ராயலங்களினூடாகவாக்களிப்பதற்குஏற்பாடு செய் யப்பட்டாலும் கூட அதிசயப்படுவதற்கு எதுவும் இல்லை.

## வன்முறையும் டி. பி. யும்

தேர்தல் நடக்க இருக்கும் நாட்கள் ஒவ்வொன் றாகக் குறைந்து கொண்டு செல்கின்ற அதே வேளை நாட்டில் வன்முறைச் சம்பவங்கள், தேர் தல் தொடர்பிலான குற்றச் செயல்கள் அதிகரித் துச் செல்லும் வேகம் தேர்தல் இடம்பெறுமா? தேர்தல் நடைபெறக் கூடுமா? என்ற சந்தேகத் தை வலுப்பெறச் செய்வதாகவே காணப்படுகின் றது. இந்தச் சந்தேகம் பலரது மனங்களிலும் இப்போது வலுவடைந்து கொண்டு வருகிறது. தேர்தல் வன்முறையின் உச்ச நிலையில் ஜனாதி பதி தமக்குரிய விசேட அதிகாரங்களின் கீழ் நாட்டை தமது நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வந்து தேர்தலை ஒத்தி வைத்து விட லாம் என்ற ஐயறவும் கூட வேகமாகவே வளர் ந்து வருகின்றது.

## கருத்துக் கணிப்பும் ஐ.தே.கவும்

இதேசமயம் இத்தேர்தலின் முடிவு எப்படி அமையும் என்பதை நாடிபிடித்துப் பார்க்க வேண்டிய அவசியமும், ஐ.தே. க விற்கு ஏற்பட்டது. பல இடங்களில் பல கோணங்களில் தேர்தல் முடிவுகள் தொடர்பான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. தேர்தல் நியமனப் பத்தி ரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இதுவரையில் மட்டும் நான்கு கருத்துக் கணிப்பீடுகள் மேற்கொ ள்ளப்பட்டுவிட்டன. இந்த நான்கு கணிப்பீடுகளில் மூன்றுஅரசாங்கத்திற்கு தோல்வி ஏற்படும்என்பதை எடுத்துக்காட்டியுள்ளது. அதைத்தொடர்ந்து பல ரும் ஆட்டம் காணத்தொடங்கி விட்டனர். கட்சி யைப் பற்றி தமக்கு இப்போது கவலையில்லை என்ற நிலையே பொதுவாக தோற்றுவிக்கப்பட் டுள்ளது.

அரசாங்க அதிகாரிகளும் புலனாய்வுத்துறை அதிகாரிகளுமாக முப்பத்தியெட்டு உயர்மட்ட அதிகாரிகள் தலைமையில் அனுராதபுரம், பதுளை கொழும்பு, திகாமடுல்ல (அம்பாறை) காலி, மாத் தறை, அம்பாந்தோட்டை, கம்பஹா, களுத்து றை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, நுவரேலியா, பொலநறுவை, இரத்தினபுரி, புத் தளம் ஆகிய பதினேழு தேர்தல் மாவட்டங்களில் இருவாரங்கள் தங்கியிருந்து தேர்தல் மதிப்பீடுகள் மேற்கொண்டனர். இதன் அடிப்படையில் நூற்றி பத்து முதல் நூற்றி இருபது வரையிலான ஆசன ங்களை பொதுஜன ஐக்கிய முன்னணி கைப்பற்றும் என்று ஆய்வினைமேற்கொண்டவர்கள் வெளிப்படையாகத் தெரிவித்தனர்.

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, வன்செயல் கால ங்களில் காணாமற் போனவர்கள் மற்றும்பல இடங் களில் கண்டறியப்பட்ட மனித புதைகுழிகள், மர்ம எலும்புக் கூடுகள், ஊழல், வீண்விரயம் போன்ற வற்றுடன் வடக்கு, கிழக்கு பகுதியில் தொடர்ந்து நடைபெற்றுவரும் போரினாலும் மக்கள் சலிப்படைந்து போயுள்ளமை ஐ.தே.க. வின் தோல்விக்கு பிரதான காரணம் எனக் கணிப் பிட்டவர்கள் கூறுகின்றார்கள். மாறுதலை மக்கள் விரும்புகின்றனர். இவர்கட்கு ஏதோ ஒரு வகையில் மாறுதல் நடவடிக்கை அவசியம் என்றும், அதனை அரசாங்கம் மேற் கொள்ளல் வேண்டும் என்றும், மக்கள் எதிர்பார்க்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள் ளனர்.

இதே வேளை இராணுவ புலனாய்வு பிரிவினர் மற்றும் அரசாங்க கட்சியினர் இணைந்து மேற்கொ ண்ட மற்றுமொரு கணிப்பீட்டில் அறுபது சதவிகித த்திற்கும் அதிகமான மக்கள் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியை விரும்புவதாகவும். முப் பத்தியேழு சதவிகிதத்தினர் மட்டும் மீண்டும் ஐ. தே.க. ஆட்சி வருவதை விரும்புவதாகவும் கண்ட றியப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க ஏரிக்கரை பத்திரிகை நிறு வனமான லேக் ஹவுஸ் நிறுவனம் நடத்திய மற்று மொரு கருத்துக் கணிப்பீடு 58 சதவிகிதத்தினர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி ஏற்பட வேண்டுமென விரும்புவதாகத் தெரிவித்தது. இக் கணிப்பீடு முன்னைய கணிப்பீடுகளுக்கு முற்றிலும் தலைகீழானது. அரசாங்கத்தின் பூரண கட்டுப்பா ட்டுக்குள் லேக்ஹவுஸ் இருப்பதும், இந்நிறுவனத் தின் பாரிய பொறுப்புக்களில் அண்மையில் கூட மாற்றம் செய்யப்பட்டிருப்பதும் இக்கணிப்பீட்டின் நம்பகத் தன்மையை பாதிப்பது குறிப்பிடக் கூடி யதே. அத்துடன் லேக் ஹவுஸ் கருத்துக் கணிப்பீடு நடத்தியதன் அடிப்படை என்ன? எத்தகைய தர வுகள் இம் முடிவிற்கு வர வழி வகுத்தது? என்பது போன்ற பல வினாக்களுக்கு லேக் ஹவுஸ் பதிலை முன்வைக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படக் கூடியதாகும்.

## பெரும்பான்மையினர் விரும்பும் ஆட்சி மாற்றம்

நான்காவதாக எந்தக் கட்சிக்கும் சார்பா கவோ ஆதரவாகவோ இல்லாத நடுநிலை அமைப் பொன்று எடுத்த முழுமையான தரவின் அடிப்ப டையிலான கணிப்பீடு மொத்த வாக்காளர்களில் எழுபது சதவிகிதம் ஆட்சி மாற்றத்தை விரும்புகி ன்றனர் என்பதைக் கோடி காட்டுகின்றது; பதி னேழு ஆண்டுகளாகத் தொடரும் ஆட்சியின் மீதான சலிப்புத் தன்மையும் பதினேழு ஆண்டுக ளுக்கு முன்னர் ஐ. தே. க விற்கு முதன்முறையாக வாக்களித்த அன்றைப புதிய தலைமுறையினருக்கு எதிரணி ஆட்சியின் தன்மை பற்றியே எதுவும் தெரி

**நிமலராஜன்**

யாமல் இருக்கிறது. இப்போதைய மொத்த வாக் காளர்களில் சுமார் எண்பது சதவிகிதப் பங்கைக் கொண்டிருக்கும் 18 - 47 வயதுக்கு இடைப்பட்ட வர்களான இவர்கள் மாற்றம் ஒன்றைப் பெரிதும் அவாவுகின்றனர்.

அத்துடன் மொத்த சனத்தொகையில் சுமார் 30 சதவிகிதத்திற்கும் அதிகமானோர் யுத்தம் நிறு த்தப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண் டுள்ளனர். இவர்களில் கிராமப் புறங்களைச் சேர் ந்தவர்களே அதிகம் எனவும் ஆட்சி மாற்றத்தின் மூலம் இது நடைபெறும் என்று அவர்கள் எதிர் பார்க்கின்றனர். இவற்றை அந்த நடுநிலை ஸ்தா பனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால் நகர்ப்புற மக்களைப் பொறுத்தமட் டில் யுத்தம் தொடர்பாக அவர்கள் திட்டவட்ட மான எந்தக் கருத்தையும் தெளிவாகக் கொண்டி ருப்பதாகக் கூறுவதற்கில்லை. இருந்தும் ஊழல், வீண்விரயம் போன்றவற்றினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு அறுபது சதவிகிதமானோர் ஆட்சி மாற் றம் ஏற்படுவதை விரும்புவதற்கு காரணமாகியுள் ளது.

எனவே மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற் றம் தொடர்பான கருத்துக் கணிப்பீடுகளின் முடி வுகள் வெளிவரத் தொடங்கியதும் பலரும் தமது நிலைகளில் இருந்து இலேசாக சறுகிக் கொள்வ தும் மாற்றம் பெற்று படிப்படியாக வேறு ஒரு மாற்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதும் அவதானிக்கப்படக் கூடியதாகவுள்ளது.

## மூழ்கும்கப்பலிலிருந்து தப்பும்மாலுமி

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும் தற்போதைய தேர்தலில் மௌனப் பிரமுகருமாகியுள்ள அமைச்சர் சிறிசேன கூரே ஐ.தே.க. மக்களிடத்தில் தனது செல்வாக் கைத் தொடர்ந்து இழந்து கொண்டு செல்வதாகவும் இது மக்கள் கட்சியில் கொண்ட அவநம்பிக்கையையும், எதிர்ப்புணர்வையும் மிகத் தெளிவாக காட்டுவதாகவும் வெளிப்படையாக தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து அவர் தலைமறைவு ஆகிவிட்டார். விமான நிலைய அதி காரிகளே இவர் வெளியேறி விட்டாரா? இல் லையா? என்ற கேள்விக்கு கூட பதில் கூறவில்லை என்றும், வீட்டைச் சேர்ந்த உறவினர்கள் அவர் கொஞ்சக்காலம் வெளிப்பகுதியில்வாழ்வதற்குசென் றுள்ளார் என்றும் கூறியுள்ளனர். எது எப்படியாக இருந்த போதும் முழுமையான உண்மை இதுவரை வெளிவரவில்லை.

இதேபோல இன்னுமொரு முக்கிய சம்பவத் தையும் இங்கு குறிப்பிடலாம். ஐ.தே.க. வின் தேர் தல் நடவடிக்கை தொடர்பான முக்கிய கொள்கை வகுப்பாளராகவும், திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளராகவும் அண்மையில் நியமனம் பெற்றவ ரும், ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் அந்தரங்க ஆலோசகருமான கலாநிதி விக்கிரம வீரசூரிய, சுதந் திரக்கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனா நாயக் காவை இரகசியமாகச் சந்தித்துப் பேசியுள்ளார். சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம் பெற்ற இச் சந்திப்பின் போது ஐக்கிய தேசியக் கட் சியின் தோல்வி இப்போது தவிர்க்கமுடியாத கட்ட த்திற்கு சென்று விட்டதாக அவர் கூறியுள்ளார். இக்கூற்றை தர்மசிறி சேனநாயக்கா பகிரங்கப்படுத் திய போது விக்கிரம வீரசூரிய மறுப்பு தெரிவித்தா லும் கூட சந்திப்பு நடைபெற்றதை அவர் மறுக்க வில்லை. எனவேதான் இச் சந்திப்பின் பின்னணி என்ன? இச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் என்ன? என்னென்ன அம்சங்கள் பற்றி கருத்துப் பரி மாறப்பட்டது? என்பன போன்ற விபரங்கள் இன் னமும் வெளியிடப்படவில்லை.

அத்துடன் ஐ.தே.க. வின் தேர்தல் பிரசா ரம் தற்போது மிகவும் வேகமாக குறைந்து கொ ண்டே வருகின்றது. கட்சியின் பலவீனமான நிலை யினால் கட்சி மேலும் சீர் குலைந்து கொண்டு வரு வதையும் பலரும் ஏனோ தானோ என்ற நிலை யிலேயே தமது தேர்தல் பரப்புரைகளை மேற் கொண்டு வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. பேச்சாளர்களின் தொகை வெகுவாகக் குறைந்து ள்ளது. கூட்டம் ஆரம்பிப்பதில் பல மணி நேரம் தாமதம் ஏற்படுகிறது. ஐ.தே.க கூட்டங்களில் கல ந்து கொள்ளும் மக்கள் தொகை வீழ்ச்சி கண்டுள் ளது. பொதுவாக ஐ. தே. க. வின் பிரசாரம் சோர்வு நிலைக்கு உள்ளாகியுள்ளது.

## பொ. ஐ.ஐ. முன்னணி உற்சாகமான வாக்கு வேட்டை

இந் நிலை பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு மேலும் உற்சாகம் ஊட்டுவதாக இருக்கிறது. தோல்வியை உணர்ந்துள்ள ஐ. தே. க. வினர் வன்முறைகளை தூண்டுவதில் ஐ.தே.க. ஆர்வமாகவுள்ளது. எனினும் ஐ.தே.க. வின் இவ் வன்முறைகளை மக்கள் ஆதரவு என்னும் கவசத் தின் மூலம் பொதுசன ஐக்கிய முன்னணி தடுக்க முற்படுகிறது. இதனால் பொது ஜன ஐக்கிய முன் னணி வேட்பாளர்கள் பலரது உயிர்கள் காப்பாற் றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன். கொள்கை வேறுபாடு காட்டும் பல்வேறு அமைப்புகளும் கூட முன்னணிக்கு தமது நிபந்தனையற்ற ஆதரவை தெரிவித்து பல இடங் களிலும் பிரசாரக் கூட்டங்களை நடத்தி வருகின் றன.

ஆக மொத்தத்தில் நிலைமையைப் பார்த்தால் ஐ.தே.க தனது வெற்றிக்காக மேற்கொண்ட சகல முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுள்ளமை ஒரு புறம், வாக்குகளைப் பெற முடியாத நிலையில் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதும் சாத் தியமற்றதாகியுள்ள சூழல் மறுபுறம். எனவே இந்த நிலையில் ஒரு தேர்தலைத் திட்டமிட்டபடி நடத்தி முடித்து ஐ.தே.க விற்கு தோல்வியைப் பெற்றுத் தந்த தலைவர் என்ற சொல்லுக்கு ஆளாகுவதற்கு ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா விரும்புவாரா? அவ்வாறு விரும்பா விட்டால் தேர்தல் நடத்து வதற்கான உகந்த சூழ்நிலை இல்லை எனக்கூறி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவி யைப் பயன்படுத்தி தமக்குள்ள விசேட அதிகாரத் தைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுப்பாரா? என்ற கேள்விகள் மோதுகின்றன.

## எதிரணியின் அச்சம்

வன்முறைகள் உச்சநிலையை எட்டினால் தேர்தல் இடம் பெறாமல் போய்விடக் கூடும் என்ற அச்சம் எதிரணியினருக்கும் கிலி ஊட்டுவ தாகவே உள்ளது. இதனால்தான் தமது தரப் பினர் வன்செயல் எதுவும் தலையெடுப்பதற்கு உதவக்கூடாது என்றும் பழிவாங்கல் நடவடிக்கை

(11ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்.

ஷுமேக்கர்லெவி - வியாழன் மோதல்

# சூரியமண்டலம் பற்றி அறிவு புகட்ட இயற்கை ஏற்பாடு செய்த பாடம்

ஆயிரம் ஆண்டுகளிற்கு- ஆகக்குறைந்தது ஒரு நூற்றாண்டுக்கு ஒருமுறை நிகழக்கூடிய பிரபஞ்ச அற்புதமொன்றை பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் இம்மாதம் வானியலாளர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் கிட்டியது.

ஒருவாரகாலமாக வியாழன் கிரகமும் ஷு- மேக்கர் லெவி என்ற வால்வெள்ளியும் மோதுகின்ற காட்சியை தெளிவாக காண்பதற்கு இவர்கள் முழு முயற்சியையும் எடுத்து வந்தனர்.

ஒன்று ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'ஹபிள்' எனப்படும் விண்வெளித் தொலை நோக்கி இந்த மோதலை அவதானித்து படம் பிடித்து அனுப்பி வைத்துள்ளது. இப்படங்கள் பால்டிமோரிலுள்ள விண்வெளித் தொலைநோக்கி விஞ்ஞான நிறுவனத்தில்ஆராயப்பட்டன. வியாழன் கோளின் அடிப்பகுதியில் ஷுமேக்கர் லெவி மோதுவது தெளிவற்ற வர்ணத்திலான புள்ளியாகத் தென்பட்டது. பின்னர் வெடிப்பின் போது செயலிழக்க வைத்தது,

இந்த ஏழாவது துண்டு மூன்றரைக் கிலோமீற்றர் நீளமானது. இந்த மோதலினால் 60 இலட்சம் மெகா தொன் வெடிப்பொருளின் சக்தியை வெளியிட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் மேலும் பூமியின் பருமனுடைய ஒரு பாரிய குழி வியாழனில் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.


இந்த மோதல்களினால் வியாழனின் நிலையில் மிகச் சிறியளவு நகர்வு ஏற்படும் என விஞ்ஞானிகள் தெரிவிக் என அவர்கள் கருதினர். ஆனால் இந்த மோதல்களால் வியாழன் மண்டலத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் ஒருமாத காலத்திற்கு மேல் நீடிக்கும் என இப்போது கருதப்படுகிறது.

இந்த மோதல்களால் ஏற்பட்ட துளைகளில் இருந்து கந்தகம், அமோனியம், மக்னீசியம், சிலிக்கன்,இரும்புஆகிய மூலகங்கள் வெளிவருவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மேலும் பல மூலகங்கள் வெளிவரும் என அவர்கள் கருதுகின்றனர்.

எனினும் இந்த மோதல்களினால் வியாழன் கிரகத்திற்கு பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படாது என்றே கருதப்படுகிறது. ''விமானத்திலிருந்து கடலுக்குள் கல்லைப் போட்டால் நீர் மேலெழுந்து சிதறத்தான் செய்யும். ஆனால் விரைவில் அது பழைய நிலைக்கு வந்துவிடும் அதுபோலவே வால் வெள்ளியின் துண்டங்கள் வியாழன் மீது மோதியதால் ஏற்பட்ட விளைவுகள் விரைவாகவே சீர் செய்யப்பட்டு விடும்'' என இந்திய விஞ்ஞானி ஒருவர் கூறினார். இந்த மோதலால் பூமிக்கு எதுவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதற்குக்காரணமாகபூமிக்கும்வியாழனுக்கும் இடையிலுள்ள நெடும் தூரம் அமைகிறது.

ஆனால் இந்தமோதல் பூமியில் பெரும் பரபரப்புடன் நோக்கப்பட்டமைக்கு காரணம் என்ன?

''இந்த வால் நட்சத்திர மோதல் சூரிய மண்டலத்தைப்பற்றி மனிதர்களுக்கு அறிவு புகட்டுவதற்காக இயற்கை ஏற்பாடு செய்த பாடம் போலத் தோன்றுகிறது'' என இந்த வால் நட்சத்திரத்தைக் கண்டு பிடித்த டேவிட் லெவி தெரிவிக்கின்றார்.



வியாழன் கிரகத்தை முதலாவது வால்வெள்ளித் துண்டு "ஷுமேக்கர் லெவி 9" தாக்கிய போது தென்துருவத்திலிருந்து தொலைநோக்கி மூலம் எடுக்கப்பட்ட படங்கள். மோதலின்போது ஏற்பட்ட ஒளியினால் வியாழனின் உபகோள்கள் பிரகாசமடைந்து காணப்படுகின்றன.

இந்த வால்வெள்ளி ஏற்கனவே வியாழனின் ஈர்ப்புக்கு உட்பட்டு 21துண்டுகளாக உடைந்திருந்தது. இந்த 21 துண்டுகளும் ஒன்றன் பின் ஒன்றாக ஒரு வாரத்திற்கு வியாழன் கோளுடன் மோதும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தவகையில் கடந்த சனிக்கிழமை அதிகாலை ஷுமேக்கர் லெவி 9 என்ற முதலாவது துண்டு வியாழனுடன் மோதும் காட்சியைப் பார்க்க விஞ்ஞானிகள் காத்திருந்தனர்.

இதற்கிடையில் இந்த மோதல் மிகப்பெரிய அளவில் இராது எனவும் இந்தத் துண்டுகள் செயலிழந்து விடும் எனவும் சிலர் கருதினர். வியாழனின் ஈர்ப்புக் கவர்ச்சியினால் ஏற்கனவே துண்டுகளாகச் சிதறியிருந்த இந்த வால் வெள்ளி வியாழனை அண்மிக்கும் போது செயலிழந்து விடும் எனவும் எரி நட்சத்திரங்கள் போல எரிந்து சாம்ராகி விடும் எனவும் 'ரேச்சர்' என்னும் விஞ்ஞான சஞ்சிகை எழுதியது.

எனினும் முதலாவதுதுண்டு ஷுமேக்கர் லெவி 9 வியாழனுடன் கடந்த சனியன்று அதிகாலை எதிர்பார்க்கப் பட்டதிலும் எட்டு நிமிடங்கள் தாமதித்து 1.48 மணியளவில் மணிக்கு ஒரு லட்சத்து முப்பதினாயிரம் மைல் வேகத்தில் சென்று மோதியது.

இந்த மோதலின் போது ஏற்பட்ட தீப்பிழம்பு 1000 கிலோ மீற்றர் உயரத்திற்கு எழுந்ததை அவதானிக்க முடிந்தது. இதனால் வியாழனில் பூமியினளவு பாரிய குழி மர்மமான கறுப்புப் புள்ளியொன்றினை ஹபிள்தொலை நோக்கி காட்டியது. மேலும் ஒருபடத்தில் பறவையொன்றின்கண்ணையொத்தகருமை வடிவத்தை இது படம் பிடித்திருந்தது.

இப்படங்கள் வியாழன் மீது ஷுமேக்கர் லெவி மோதியதை ஓரளவு தெளிவாக எடுத்துக் காட்டின.

இந்த மோதல் சுமார் 20 நிமிடங்கள் நீடித்ததாக தென்னாபிரிக்க நகரான கேப்டவுண் சதர்லாந்து விண் ஆய்வு நிலைய ஆய்வாளர் டேவ் லெனி கூறினார்.

சி.சிவபாலன்

ஸ்பெயின், சிலி ஆகிய நாடுகளிலும் தொலை நோக்கிகளினூடாக இம்மோதல் அவதானிக்கப் பட்டது.

இதேவேளை ஜேர்மனியில் மியூனிச்சில் கூடியிருந்த 200 ஐரோப்பிய வானியல் ஆராய்ச்சியாளர்களால் இதனைப் பார்க்க முடியவில்லை. பிரிட்டனிலும் இக்காட்சி தென்படவில்லை என அறிவிக்கப் படுகிறது.

செவ்வாய்க்கிழமை அதிகாலை ஷுமேக்கர் லெவியின் ஏழாவது துண்டு வியாழனுடன் மோதியது.இதுவே மிகப் பெரிய துண்டாகும் இம்மோதலினால் பெருமளவு வெடிப்பு சக்தி ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட ஒளிப்பிழம்பு பூமியில் இருந்த தொலை நோக்கிகளை ஒரு கணம் கின்றனர். எனினும் உடனடியாக இதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இந்த மோதல் ஏற்படும் முன்னரே வியாழனில் இருந்து வெளியாகும் கதிரியக்க அளவு 10 மடங்காக அதிகரித்திருப்பதாக ஜப்பானிய விஞ்ஞானிகள் அறிவித்திருந்தனர்.

மேலும் வியாழன் கிரகத்தில் என்னமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன எனக்கண்டறிய விஞ்ஞானிகள் காத்திருக்கின்றனர். வியாழன் கிரகத்தை மிக நெருக்கமான முறையில் அவதானித்து வரும் கலிலியோ விண்வெளி ஓடத்திலிருந்துவரும் படங்கள் இவற்றை தெளிவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இது சிறிதளவு பழுதடைந்த நிலையில் இருப்பதால் இப்படங்கள் பூமியை வந்தடைய ஒரு மாதத்திற்கு மேலாகும் என அதன் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

20 வருடங்களாக வியாழனைச் சுற்றிவந்து கொண்டிருந்த ஷுமேக்கர் லெவிவால் வெள்ளியின் 21வது இறுதித் துண்டு எதிர்பார்த்ததற்கும் ஒருநாள் முன்னதாக கடந்த 21-ம் திகதி வியாழக்கிழமை வியாழன் கிரகத்துடன் மோதியது.

வியாழன் மீது நடைபெற்ற இந்த மோதல்களால் வியாழனில் ஏற்பட்ட விளைவுகள், தாம் முதலில் எதிர்பார்த்ததை விட மிக அதிகமாக இருந்தது என வானியல் நிபுணர்கள் கூறினர். மிகப்பெரிய வியாழன் கிரகத்தில் இந்த மோதல்கள் பெரிய மாற்றம் எதனையும் ஏற்படுத்தாது

## காத்திருப்பு

என் கிராமம் .....
பனையும், தென்னையும்
பூத்து நிற்கும் பூவரசும்
பார்த்து ரசிக்க ரோஜாவும்
இன்னும் எத்தனையோ மலர்களும் .....

பசு மேயும் புல்வெளியும்
பச்சைக் கம்பள வயல் வெளியும்,
பழுத்துச் சாய்ந்த நெற்கதிரும்
ஓசையுடன் ஓடிவரும்
ஓடையும்

ஆகா......
எத்தனை அழகானது
என் கிராமம்!
இன்று-
சிங்கள தேசத்தவனின்
ஆக்கிரமிப்பில் என் கிராமம்......
தாயை இழந்து ..... தந்தையை இழந்து ....
உறவுகளைப் பிரிந்து
கற்பிழந்து-
கைபிடித்த கணவனை இழந்து
கண்ணீரும் ரத்தமும்
கலந்து ஓடுகிறது
என் கிராமத்தில்...

நான்
காத்திருக்கிறேன்......
எனது தேசத்தின் விடியலுக்காக...
எனது விழியைத் தூங்கவிடாமல்
பார்த்திருக்கிறேன்
காவலரணில் எதிரிக்காக...

-பூவேந்தன்

பழைய மாணவர் சங்கம் நடாத்தும்

யாழ். மத்திய கல்லூரி (1816-08

# 175-வது ஆண்டு நிறை

காலம்: 31-07-94 ஞாயிற்றுக்கிழமை 01-08-94 திங்கட்கிழமை

முற்பகல்:

**7-30 விசேட பூசை - முனியப்பர் கோயில்**

ஏற்பாடு: திரு. என். செல்வநாயகம்

விசேட ஆராதனை

யாழ் மெதடிஸ்த தேவாலயம்

ஏற்பாடு: திரு. ஏ. தம்பித்துரை

**மங்கள இசை:**

நாதஸ்வர கிரஞ்சங்கள்

வி. கே. கானமூர்த்தி, வி. கே. பஞ்சமூர்த்தி

தவில்:

திரு. கே. கணேசன், திரு. க. சுப்பிரமணியம்

**8.45 தேசியக்கொடி ஏற்றல்**

திரு. வே. இளங்குமரன்

பொறுப்பாளர் தமிழீழ கல்விக் கழகம்

**கல்லூரிக் கொடி ஏற்றல்**

திரு. நா. க. சண்முகநாதபிள்ளை [அதிபர்]

**பழைய மாணவர்சங்கக் கொடிஏற்றல்**

டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறன்

[தலைவர், பழையமாணவர்சங்கம் யாழ்ப்பாணம்]

**9-00 கல்லூரிப் பெயர் வளைவுத் திரைநீக்கம்**

தமிழ் - டாக்டர் எஸ் பி. ஆர். சீர்மாறன்

ஆங்கிலம் - லயன் எஸ். இராமகிருஷ்ணன்

**9-05 175ஆவது ஆண்டு நிறைவு மண்டப அடிக்கல் நாட்டல்**

கலாநிதி என். எதிர்வீரசிங்கம்

[உப-காப்பாளர்: ப. மா. ச.]

**9-10 சரஸ்வதி சிலை மேடை**

அன்பளிப்பு: பேரரசி வண்ணச்சோலை

திரைநீக்கம்: செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

[தலைவர், துர்க்கா தேவஸ்தானம் தெல்லிப்பழை]

**9-20 பழைய மாணவர் சங்க அலுவலகம் திறத்தல்**

பேராசிரியர் வி. நவரெத்தினராசா

[உபகாப்பாளர்: ப. மா. ச.]

**9-25 கல்லூரிக்கீதத் தமிழ் மொழி பெயர்ப்பு அரங்கேற்றம்**

வண. டி. எஸ். தியாகராஜா

[உப-தலைவர் ப. மா. ச.]

**9-30 மங்கள விளக்கேற்றல்**

திரு. வே. இளங்குமரன்

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

வண. ஆயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்

பேராசிரியர் வி. நவரெட்ணராசா

திருமதி பி. எஸ். ஸ்கந்தராசா

திரு. எஸ். தனபாலன்

திரு. நா. க. சண்முகநாதபிள்ளை

டாக்டர் எஸ். குகதாசன்

டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறன்

டாக்டர் என் எதிர் வீரசிங்கம்

டாக்டர் எஸ். சிற்றம்பலம்

திரு. இன்பன்

**வண. ஜேம்ஸ் லிஞ்ச் அரங்கு**

தலைவர்: டாக்டர் எஸ்.பி.ஆர். சீர்மாறன்

**9.40 தமிழ்த்தாய் வாழ்த்து**

**9.50 அமைதி வணக்கம்**

**9.52 விழா அறிமுகமும் வரவேற்புரையும்**

திரு. கா. மாணிக்கவாசகர்

[உப - தலைவர், ப. மா. ச]

**10.00 தலைமையுரை**

**175வது ஆண்டு நிறைவு விழா மலர் வெளியீடு முதற்பிரதி**

**பெறுநர்கள்:**

பேராசிரியர் கே. குணரட்ணம்

துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்

பேராசிரியர் வி. நவரட்ணராஜா

உப - காப்பாளர், பழைய மாணவர் சங்கம்

டாக்டர் எஸ். குகதாசன்

(கண்சிகிச்சை நிபுணர்) உப - காப்பாளர் பழைய மாணவர் சங்கம்

லயன் எஸ். இராமகிருஷ்ணன்

முன்னைநாள் தலைவர், உப - காப்பாளர் பழைய மாணவர் சங்கம்.

வண. டி. எஸ். தியாகராஜா

உப - தலைவர், பழைய மாணவர் சங்கம்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

கலைப்பீடாதிபதி, யாழ் பல்கலைக்கழகம்

பேராசிரியர் எஸ். மகேஸ்வரன்

விஞ்ஞானபீடாதிபதி, யாழ் பல்கலைக்கழகம்

பேராசிரியர் கா. சிவத்தம்பி

தலைவர், நுண்கலைத்துறை, யாழ்பல்கலைக்கழகம்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

தலைவர், தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்

பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம்

கௌரவ செயலாளர், இ. செ. சங்கம்

பேராசிரியர் நீ. சவரிமுத்து அடிகள்

இயக்குநர், திருமறைக்கலா மன்றம், யாழ்ப்பாணம்

வைத்திய கலாநிதி என். கனகரட்ணம்

தலைவி, பழைய மாணவிகள் சங்கம், வேம்படி மகளிர் கல்லூரி

பணிப்பாளர், யாழ் போதனா வைத்தியசாலை

திரு கே என். வை. மொறிஸ்

தலைவர், பழைய மாணவர் சங்கம், சென்ற் ஜோன்ஸ் கல்லூரி

திரு. க. பரமேஸ்வரன்

தலைவர், பழைய மாணவர் சங்கம், யாழ் இந்துக்கல்லூரி

பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம்

திரு. பொ. பாலசிங்கம்

மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

திரு சுந்தரம் டிவகலாலா

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி.

திரு. இ. சரவணபவன்

நிர்வாக இயக்குநர், உதயன் நிறுவனம்

தலைவர் றோட்டறிக்கழகம் யாழ்ப்பாணம்.

திரு. டொமினிக் ஜீவா

ஆசிரியர், மல்லிகை

திரு. கே. கணேசமூர்த்தி

F.C.I.B. (LONDON)

பிரதேச முகாமையாளர் இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்

திரு. சி. தியாகராஜா

பணிப்பாளர், உடற்கல்வித்துறை யா ப. க.

திரு. எஸ். சோதிலிங்கம்

தலைவர், சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம்

முகாமையாளர், ஹட்டன் நாஷனல் வங்கி யாழ்ப்பாணம்

திரு. ஆர். வெங்கட்ராமன்

முகாமையாளர், வர்த்தகவங்கி, யாழ்ப்பாணம்

திரு ஐ கணேசலிங்கம்

பிரதான முகாமையாளர் மக்கள்வங்கி (கேகேஎஸ்)

திரு. இ. ஜெயராஜ்

அமைப்பாளர், கம்பன் கழகம், யாழ்ப்பாணம்

திரு கே. சிவானந்தமூர்த்தி

முதுநிலை விரிவுரையாளர் மெய்யியற்துறை யா. ப. க.

திரு. க. தேவராஜா

முதுநிலை விரிவுரையாளர்

வர்த்தக முகாமைத்துவ கற்கைநெறி யா.ப.க

செல்வி சு. அருளானந்தம்

முதுநிலை விரிவுரையாளர், கல்வித்துறை, யா.ப.க

திரு. கே. கே. அருள்வேல்

முதுநிலை விரிவுரையாளர், வர்த்தகம், யா.ப.க

திரு. கே. கணேசநாதன்

விரிவுரையாளர், வர்த்தகம், யா. ப. க.

திரு. சொலமன் சூ. சிறில்

தலைவர், யாழ்ப்பாணம் பல நோ.கூ. சங்கம்

திரு. கே. பாலகிருஷ்ணன்

உப தலைவர், இ. செ. ச. யாழ்க்கிளை.

எஸ். எம். பெர்ணாண்டோ

திரு. எஸ். றெஜி

உரிமையாளர், லாவன்யா, V. T. அன்ட் சன்ஸ்

எஸ். வி. முருகேசு

எஸ். வி. எம். நிறுவனம்

பேரரசி வண்ணச்சோலை

(மகாராணி டெக்டைல்ஸ்)

திரு. எம். அரியரட்ணம்

திரு. உரி... திரு... பேரா... திரு... லிங்க... உரிமை... திரு... திரு... திரு... திரு... திரு... திரு... திரு... திரு... திரு... த. ச... லிங்க... திரு... இல... திரு... 10... 10... 10... 11... 11... 11...


விதுரா ஆடை அகம்
VITHURA TEX
No 34, MODEL MARKET (INSIDE) JAFFNA
34, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

இல. 2, ...

சுவையருவி
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

எழிலகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

அழகுநிலா நகை...
213, கஸ்தூரி...
யாழ்ப்பா...

பேரரசி வண்ணச் சோலை
(மகாராணி)
50, சோதியா தெரு
யாழ்ப்பாணம்.

புஸ்பா அன் கோ
293, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்:
162, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு- 13

ராசி பட்டு...
RASI SI...
NEW MARKET ...
சிறப்பு அங்காடி - ...

தரன் ஸ்ருடியோ
189, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாரத் ஸ்ருடியோ
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நாகலிங்கம் அப்பு...
அருச்சுனா வீதி,

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

## Old Boys Association Celeberates

# 175th ANNIVERSARY OF THE JAFFNA CENTRAL COLLEGE-JAFFNA

(316-08-01)

# றைவு விழா

கட்கிழமை

## இடம்: யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

திரு. கே. வி. மகேஸ்வரன்
உரிமையாளர், நியூ சுபமாலா மோட்டோர்ஸ்

திரு. பி. அற்புதநாதன்
புஸ்பா டிரான்ஸ்போர்ட்

பேரம்பலம் அன் சன்ஸ்

திரு. எஸ். பாலா
வி. எஸ். பி. குறூப்

லிங்கம் கூல்பார், யாழ்ப்பாணம்

உரிமையாளர் லெய்டன் புடவை நிலையம், யாழ்ப்பாணம்.

திரு. துரைரட்ணம் ஞானசீலன்
வடஇலங்கை தொழில்நுட்ப நிறுவனம்

திரு. சுரேன் ஏ. இ. கிறீஸ்தோபர்
பிறீமியர் கபே அன்ட் பேக்கரி

திரு. ஏ. எஸ். தியாகராஜா
அல்டி நிறுவனம்

திரு. எஸ். பி. ரஜீவன்
உதவி முகாமையாளர், வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்.

திரு. ஜே. ஆர். செல்வகுணாளன்

திரு ஏ. பாலகாந்தன்
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

திரு ஜி. ஆர். ஹண்டி
பொறியியலாளர், **Archirodon U.A.E**

திரு. எஸ். பாலசுப்ரமணியம்
மணியம் ஸ்டோர்ஸ், திருநெல்வேலி

த. சற்குணராசா
திருமாட்டி (சீமாட்டி) - யாழ்ப்பாணம்.
உரிமையாளர்

லிங்கம் டெக்ஸ்டைல்ஸ்
யாழ்ப்பாணம்

திரு க. உருத்திரசிங்கம்
இலங்கை போக்குவரத்துச்சபை - கோண்டாவில்

திரு ஆர் ஜனக்குமார்
அசோக நகையகம், யாழ்ப்பாணம்

**10.30 ஆசியுரை**
நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
[நல்லை ஆதீனம், நல்லூர்]

10.40 அதிவணக்கத்திற்குரிய ஆயர்
கலாநிதி ரி. சௌந்தரநாயகம்
அடிகள் **(BISHOP OF JAFFNA)**

10.50 செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

11.00 வண ஆயர் கலாநிதி
எஸ். ஜெபநேசன்

11.10 காப்பாளர் உரை
திரு. நா. க. சண்முகநாதபிள்ளை

11.20 உப காப்பாளர்கள் உரை
கலாநிதி என். எதிர்வீரசிங்கம்
[விரிவுரையாளர்: யா. ப. க.]

11.30 திரு. எஸ். இராமகிருஷ்ணன்
[முன்னாள் தலைவர் ப. மா. ச.]

11.40 மாணவர் பிரதிநிதி
செல்வன் எஸ். ஜெகன்மோகன்
[சிரேஷ்ட மாணவர் தலைவர் யா.ம.க]

11.50 ஆசிரியர் பிரதிநிதி
திரு. எஸ். நடராஜா
[ஆசிரிய வட்டத் தலைவர்]

12.00 கலாநிதி எஸ். கே. சிற்றம்பலம்
[தலைவர்: வரலாற்றுத்துறை யா.ப.க]

12.10 திருமதி பி. எஸ். ஸ்கந்தராசா
[அதிபர்: வேம்படி மகளிர் கல்லூரி]

12.20 திரு. எஸ். தனபாலன்
[அதிபர்: பரி. யோவான் கல்லூரி]

12.30 சிறப்பு விருந்தினர்கள் உரை
திரு. அ இன்பன்
[பொறுப்பாளர்: மாணவர் அமைப்பு]
திரு. வே. இளங்குமரன்
[பொறுப்பாளர்: கல்விக் கழகம்]

பிரதம விருந்தினர் உரை
திரு. கா. மாணிக்கவாசகர்
[அரச அதிபர் - மாவட்ட ஆணையாளர் யாழ்]

நன்றியுரை: திரு. என். இராஜதேவன்
[செயலாளர் ப. மா. ச.]

பிற்பகல்
1.00 நண்பகல் விருந்து - உபசரிப்பு:
வேம்படி மகளிர் கல்லூரி மேபிள் தம்பையா மண்டபம் — பழைய மாணவிகள், ஆசிரியர்கள், வேம்படி மகளிர் கல்லூரி.

2.00 175 ஆவது ஆண்டு நிறைவாக மரங்கள் நாட்டல்

2.30 மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டி:
பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்
எதிர்
யா. ம. க. ஆசிரியர்கள்
பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும் யாழ் மத்தியகல்லூரி ஆசிரியர்களுக்குமிடையில் நடைபெறும் மென்பந்து கிரிக்கற் போட்டி

5.00 பரிசளிப்பு வைபவம்

5.15 அதிபரின் தேநீர் விருந்து

6.00 கல்லூரிக் கீதம்

### 1994 - 08 - 01 திங்கட்கிழமை
### யாழ் மத்திய கல்லூரி நாள்

மாலை 4 மணி: தேசியக்கொடி ஏற்றல்
கல்லூரிக்கொடி - அதிபர், யா. ம. க.
பழைய மாணவர் சங்கக்கொடி, தலைவர் ப. மா. ச.

தலைவர்:
டாக்டர். எஸ். பி. ஆர். சீர்மாறன்
தலைவர், பழைய மாணவர் சங்கம்

பிரதம விருந்தினர்:
டாக்டர் எஸ். குகதாசன்
உப - காப்பாளர் ப. மா. ச (கண்சிகிச்சை நிபுணர் யாழ். போதனா வைத்தியசாலை

முதன்மை விருந்தினர்:
கலாநிதிஎன். எதிர்வீரசிங்கம் (Ph. D.
(உப காப்பாளர் ப. மா. ச) விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. என். கே. சண்முகநாதபிள்ளை
(அதிபர் யா. ம. க, காப்பாளர், ப. மா. ச)
பேராசிரியர் வி. நவரட்ணராஜா
(உப - காப்பாளர், ப. மா. ச)

லயன் எஸ். இராமகிருஷ்ணன்
(முன்னைநாள் தலைவர், உப -காப்பாளர் ப. மா. ச)
திரு. எஸ். முருகநேசன்
(செயலாளர், விளையாட்டு அபிவிருத்திச் சபை தமிழீழ விடுதலைப் புலிகள்)

திரு. எஸ் சோதிலிங்கம்
(தலைவர், சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம், முகாமையாளர், ஹட்டன் நாஷனல் வங்கி, யாழ்ப்பாணம்)

4.05 விளையாட்டு வீரர்களை விருந்தினர்களுக்கு அறிமுகம் செய்தல்

4.15 பூவா தலையா போட்டுப்பார்த்தல்

4.20 போட்டிகள் ஆரம்பம்

5.00மணி பரிசளிப்பு வைபவம்
திருமதி எஸ். குகதாசன்

5.30மணி அதிபரின் தேநீர் விருந்து

6.00மணி கல்லூரி கீதத்துடன், யாழ். மத்திய கல்லூரி நாள் நிகழ்ச்சிகள் முடிவடையும்.

மாணவர்கள், பழையமாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள், விளையாட்டு ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், செயலாளர், பழைய மாணவர் சங்கம்.

**முகுந்தா ஆடையகம்**
இல. 2, சிறப்பு அங்காடி யாழ்ப்பாணம்.

**பிறீமியர் பேக்கரி அன்ட் கபே**
மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

**..நிலா நகைமாடம்**
..213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**செந்தாமரை குளிர்த்தடாகம்**
370, சேணல் கிட்டு சாலை(ஆஸ்பத்திரி வீதி)
யாழ்ப்பாணம்.

**திருமாட்டி**
(சீமாட்டி) புடைவைக்கடல்
122, மின்சார நிலைய வீதி- யாழ்ப்பாணம்.

**..சி பட்டுச்சோலை**
**RASI SILK**
..EW MARKET - JAFFNA
.. அங்காடி - யாழ்ப்பாணம்.

**எஸ். எம். பெர்ணாண்டோ**
580, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

**அல்டி நிறுவனம்**
**ALDI**
மின்சார நிலைய வீதி - யாழ்ப்பாணம்.

**..ம் அப்புலிங்கம்**
..தி, யாழ்ப்பாணம்.

**E. S. பேரம்பலம் சக நிறுவனம்**
50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**V. S. B. GROUP**
**266A, STANLEY ROAD JAFFNA**
(சி9990)

## சாள்ஸ்-டயானா மன(ண) முறிவு

# பிரிட்டிஷ் அரச பாரம்பரியங்களுக்கும் சகஜ வாழ்விற்கும் இடையிலான முரண்பாடா?

வேல்ஸ் இளவரசராக பிரகடனப்படுத்தப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டபோதிலும்மன்னராகும் பாக்கியம் பிரித்தானியாவின் முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் இற்குக் கிடைக்கப்போவதில்லை. மாறாக இவரது மகனான வில்லியமுக்கே இப்பேறு கிட்டலாம் என நம்பப்படுகிறது.

பிரித்தானியமக்களின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்த இளவரசர் சாள்ஸ் இன்று அனைவரதும் விமர்சனங்களுக்கும் வெறுப்புக்கும் ஆளாகிக்கொண்டிருக்கிறார். இங்கிலாந்து இன்டிபென்டன் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு இவர் அளித்த பேட்டியே இவரது இன்றைய நிலைக்குக் காரணம் என்பதில் ஐயமில்லை.

அரசகுடும்பத்தினரின் தனிப்பட்ட, அந்தரங்க மற்றும் உள்விவகாரங்கள் பற்றி இந்நிறுவனம் புட்டுப்புட்டுக் கேள்விக்கணைகளைத் தொடுத்தது. பொதுவாகவே தன்னை வெளிப்படையாக அடையாளம் காட்டிக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்வதில் 'மன்னரான' சாள்ஸ் இதன் போது மனம் திறந்து வெளிப்படையாகவே தன் அந்தரங்கங்களை எல்லாம் அம்பலமாக்கி விட்டார்.

இதுவரையில் அனைவராலும் காதோடு காதாகப் பேசப்பட்டு வந்த தனது காதல் விவகாரத்தை அவரே வெளிப்படையாக ஒப்புக்கொண்டு விட்டமையானது எழுந்த சந்தேகங்களுக்கு எல்லாம் முற்றுப்புள்ளியாகி விட்டது.

''திருமதி பார்க்கர் பவல்ஸ் எனது நீண்டகால, நெருக்கமான நண்பி. எதிர் காலத்திலும் அப்படித்தான்இருக்கப் போகின்றோம்'' என்று கூறிய அவர் டயானாவிடமிருந்து பிரிந்து வாழ முடிவு செய்த பின்னர் கமிலாவைத் தான் நாடியதையும் ஒப்புக் கொண்டார்.

''டயானாவுடனான பிரச்சினை முற்றி எதிர்கால திருமண வாழ்வு கேள்விக்குறியான போது பெரும் மன உளைச்சலுக்கு ஆளானேன். பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது. இந்த நிலையில் எனக்கு அன்பும்ஆதரவும் தேவைப்பட்டது. அப்போது என் பழைய நண்பர்கள்தான் கை கொடுத்தனர். அவர்கள் வழங்கிய 'ஆதரவு' நிம்மதியைத் தந்தது. திருமண முறிவிற்குப் பின் மனைவிக்குத் துரோகம் இழைத்தது இப்படியான சூழ்நிலையில்தான்'' என்கிறார் இளவரசர்.

சாள்ஸின் மனம்கவர்ந்தவரான கமிலா, பிரிகேடியரான அன்று பார்க்கர் பவல்ஸின் மனைவியாவர். 48 வயதான கமிலாவின் கணவருக்கு 55 வயது. சாள்ஸுக்கோ 45 வயது. சின்ன வயது முதலே சாள்ஸ்இற்கும் கமிலாவிற்குமிடையே நெருக்கம்இருந்துவந்துள்ளது. அந்தஸ்தும் கம்பீரத்தோற்றமும், கட்டுமஸ்தான உடலும் கொண்ட இளவரசர் இளம் பெண்களுடன் பழகுவதில் நாட்டமுடையவர்.

கமிலா, பார்க்கரையும் சாள்ஸ், டயானாவையும்திருமணம் செய்து கொள்வதற்கு முன்னரேயே இவர்கள் இருவருக்குமிடையில் வலுவான உறவு இருந்துள்ளது. ஆயினும் இளவரசருக்குரிய கடமைகளைச் செய்வதற்காகவே இவர் இளமையும் அரசலட்சணமும் பொருந்திய டயானா சீமாட்டியை கோலாகலமாக 81ம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார்.

திருமணமாகி சில ஆண்டுகள் கழிவதற்குள்ளேயே இருவருக்குமிடையில் கருத்து வேறுபாடுகளும் மனக்கிலேசங்களும் ஏற்படலாகின. இதனால் நிம்மதியிழந்த இளவரசர் மீண்டும் தன்பால் அன்பு செலுத்தும் கமிலாவை நெருங்கினார்.

இளவரசர் படித்தவர். முடிக்குரிய இளவரசராவதற்கான, எதிர்கால மன்னராவதற்கான சகல பயிற்சிகளையும் பெற்றிருப்பவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். ஆங்கிலத்தில் நல்ல புலமை கட்டடக்கலை, தத்துவம், ஓவியக் கலை எனப் பல்வேறு உயர்தர விடயங்களில் ஆர்வம்மிக்கவர். மலையேறுதல், பனி சறுக்கல், குதிரையேற்றம், போலோ விளையாட்டு, வேட்டையாடுதல் போன்ற அரச விளையாட்டுகளில் பிரியம் கொண்டவர்.

இவரிடம் ராஜமிடுக்கு அதிகம். மாளிகையில் உணவருந்துவதாக இருந்தாலும் கூட அதற்கான உடைகளை அணிந்து சம்பிரதாய பூர்வமாகத் தான் வருவார். எதற்கும் ராஜநடை முறைகளைப் பின்பற்றுவதில் அக்கறை காட்டுபவர்நெருங்கியவர்கள்கூடமகாராணியை உங்கள் தாயார் எனக்கூறுவதைக் கூட விரும்பாதவர். அரசர்கள் தமது பாரம்பரியத்தை காப்பாற்றி வரவேண்டும் என்பதில் திடம் கொண்டவர். பொது இடங்களில் கண் கலங்கக்கூடாது பிள்ளைகளிடையே பாசத்தை வெளிப்படையாகக் காட்டக்கூடாது என்பதில் எல்லாம் ராஜநடைமுறைகளைக் கடைப்பிடிப்பவர்.

ஆனால் இவருடைய மனைவியான டயானாவோ அரச வம்சத்தைச் சேர்ந்த பேரழகியானாலும் உயர் கல்வி பெற்றவரல்ல. உயர்நிலைக்கல்லூரியுடன் கல்விக்கு முழுக்குப் போட்டவர். இளவரசர் இவரைத்தன் துணைவியாகஅடையாளம் கண்டபோது பாலர் வகுப்பு ஆசிரியையாகத்தான் பணியாற்றிக் கொண்டிருந்தார். எந்தவொரு விடயத்தினையும் ஆழமாக தர்க்க ரீதியாக அ.சி ஆராயக்கூடியவர் அல்ல. மொத்தத்தில் இவர்கள் இருவருக்கும் இடையிலான விருப்பு வெறுப்புக்கள் நேர் எதிர்மாறானவையாகவேயிருந்தது.

டயானா எங்கு சென்றாலும் அந்த இடத்துக்குக் கலகலப்பூட்டுபவர். எவரானாலும் சிரித்துப் பேசுவார் அரச நடைமுறைகளை அதிகம் கண்டுகொள்ளாதவர். அரச பாரம்பரியங்களை அப்படியே எல்லா இடங்களிலும் பின்பற்ற வேண்டியதில்லை மாறி வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ற மாதிரி நடந்து கொள்ள வேண்டும் என்ற கொள்கையுடையவர் அரச குடும்பத்தினர் எப்போதும் உச்சாணிக் கொம்பில் ஏறியிருக்கத் தேவையில்லை பெயருக்கு ராஜ கடமைகளில் ஈடுபடுவதோடு காரியம் முடிந்து விட்டதாகக் கருதி விடக் கூடாது உண்மையாகவே சமூகப்பிரச்சினைகளோடு மக்கள் நல செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும் என நினைப்பவர் டயானா.

திருமணமாகிய ஓரிருவருடங்களிலேயே தாமிருவரும் இரு துருவங்கள் என்பதை இருவருமே நன்கு புரிந்து கொண்டனர். இதன் ஒட்டுமொத்த விளைவே ஏற்பட்ட விரிசலாகும். மொத்தத்தில் பேரழகு கட்டழகு, கவர்ச்சி என்பதெல்லாம் வெறும் போலியான வெளிப்பார்வை

சசிகரன்

மட்டுமே, உண்மையான, ஒற்றுமையான மண வாழ்க்கைக்கு மனப்பொருத்தம் தான் மிக அவசியம் என்ற உண்மை வெளிப்படையாகிறது. உடல் இரண்டாம் பட்சமாகியது. இல்லையேல் திருமணமான, வயதான, கவர்ச்சியற்ற கமிலா பார்க்கரை சாள்ஸ் நாடியிருக்கமுடியாது. மாறாக வயதோ, அழகோ இங்கே பொருட்டல்ல. மனப்பொருத்தமும் நிம்மதியும் உணர்ச்சிகளுக்கு வடிகாலும் தான் முக்கியமாகிறது.


இளவரசர் தனது அந்தரங்கமான இவ்விடயத்தினை தொலைக்காட்சி மூலம் தான் நேரடியாக வெளியிடுவதால் அது தன் எதிர்காலத்தைப் பாதிக்கும் என தெரிந்திருந்தும் இவ்வாறு துணிந்துவெளியிட்டதுடன் அதற்கு நியாயமும் கற்பிக்க முற்பட்டதிலும் காரணம் இருக்கத்தான் செய்கிறது.

அரச வம்சங்களில் சாள்ஸ் மட்டும் இவ்வாறான ஒரு இழுக்கைத் தேடியவராக இல்லை. இவ்வாறான காதல் விவகாரம் பல பிரபலமான அரசர் வாழ்விலும் இருந்தே வந்துள்ளது. உலக சரித்திரத்தைப் புரட்டினால் இங்கிலாந்தின் முதலாம் ஹென்றி மன்னர், எட்டம் ஹென்றி மன்னர் இவருக்கு ஆறு மனைவிமார் அத்துடன் இங்கிலாந்து மன்னர்கள் இத்தகைய உறவுகளுக்காக தமது மனைவிமாருக்கு மரண தண்டனை ே[illegible] வழங்கியிருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் மகுடம் வைத்தாற் போல் விளங்கியவர் ஏழாம் எட்வேட். இவர்களது இத்தகைய செயல்கள் மன்னராட்சிக்கு குந்தகம் விளைவித்ததாக இல்லை.

இதனால் தான் போலும் டயானாவை விவாகரத்து செய்வதாக இல்லை. அதே வேளை இணைந்து கொள்ளப் போவதுமில்லை என்றும் தனது காதல் விவகாரமோ, விவாகரத்தோ தான் சிம்மாசனம் ஏறுவதற்கு எவ்விதத்தி

(11ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டொன்று மெள்ளவிட்டுப் போகும் அலையென்றும் நெஞ்சில்முட்டி மோதும்



### செல்வி இளவேணி அதிருபசிங்கம்

வல்வெட்டித்துறை

மடியினில் இம்மங்கை 03.05.70

கடலினில் இக்கங்கை 10.08.93

**திதி: 30 - 07 - 94 (நாளை)**

இளையவளே இனியவளே இதயமெலாம் நிறைந்தவளே
இன்றுந்தான் உன்பிரிவால் இடையின்றி அழுகின்றோம்
எதுதானோ சென்றவழி ஏதிடமோ யாமறியோம்
எமக்கேதும் சொல்லாமல் ஏன்தானோ பறந்தாய் நீ

பருவத்துப் பெண்ணாய்நீ பறந்தோடிச் சென்றாலும்
இதயத்தில் சிலையாகி இறையெனவே உயர்வாயே
தருணத்தே நீயெம்மைத் தவிக்கவிட்டுச் சென்றாலும்
திருவொத்த வடிவினிலே திகழ்வாயே மனைதனிலே

கருத்தாலே தந்தசுகம் கண்ணீராய் ஓடுதம்மா
சிரிப்பாலே தந்தசுகம் சிந்தையிலே மோதுதம்மா
வனப்பாலே தந்தசுகம் வெந்தழலாய் வாட்டுதம்மா
குணத்தாலே தந்தசுகம் குற்றுயிராய் ஆக்குதம்மா

கரைதேடிய எம்கண்கள் கலந்தனவே உன் அன்பில்
வெறுந்தேகம் இங்கே மண்ணில் வாழ்கின்றோம் உன் நினைவில்
நீ மறைந்த சேதியுடைதேதி நின்றிடுமே இனி எம்மில்
சின்னக்காவே எமைவிட்டுக் கலந்தாயோ நீ விண்ணில்

அன்புருவே அக்காவே அலைகடலில் நீ கரைந்தாய்
ஆனாலும் எம் நெஞ்சில் அலையெனவே நீ நிறைந்தாய்
ஆண்டொன்று எமைவிட்டு மெள்ளனவே இன்று போகும்
அலையென்றும் நெஞ்சில் முட்டி ஓயாதே நின்று மோதும்

நிறைவாய் — கண்கள் மலர்களைச் சாற்றிட
இறையாய் — உன்னை நித்தமும் போற்றுவம்.

**ஐயா, அம்மா, அக்கா, தம்பியர்**
**பற்றுள்ளோர், பாசமுள்ளோர்**

எம் மனைதனில் வந்து எம்முடன் இணைந்து
எம் ஆருயிர்ப் புதல்வியை அகம் கொண்டிருக்க!
அவளின் ஆத்ம சாந்திக்காய் எம்முடன் அமுது கொள்க!!

நெடியகாடு வல்வெட்டித்துறை. (8929)

-குடும்பத்தினர்

யாழ்ப்பாணம் ... நூலகம்.

# கொழும்பில் ரணிலும்; கண்டியில் காமினியும் எதிர்பார்த்து நிற்பது என்ன?

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை விட தோல்வியடைவதற்கான வாய்ப்பே அதிகம் உள்ளதாகத் தேர்தல் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இத் தோல்வியை ஏற்றுக்கொள்வதற்கும், அத்தோல்வியின் விளைவால் ஏற்படப் போகும் பாதிப்பில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கும், அதனைத் தாங்கிக் கொள்வதற்கும் ஐ. தே. கவினர் தயாராகி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு தோல்வி ஒன்றை ஐ. தே. கவினர் எதிர்பார்த்திருக்கும் வேளையிலும், கட்சிக்குள் அடுத்த தலைவர் யார்என்பதற்கான போட்டி உச்ச நிலையிலேயே உள்ளது. இதன் காரணமாக ஓரங்கட்டுதல், ஒதுக்குதல் போன்றவையும், தமது வெற்றி வாய்ப்பை உயர்ந்த பட்சமாகத் தீர்மானித்துக் கொள்வதிலும் இரண்டாம் நிலைத் தலைவர்கள் பெரும் போட்டியில் இறங்கியுள்ளனர். இதில் ரணில் விக்கிரமசிங்காவும். காமினி திசாநாயக்காவும் தம்மாலான சகல வழிமுறைகளையும் கடைப்பிடித்து வருகின்றனர்.

காமினி திசாநாயக்கா மீண்டும் ஐ. தே. கவிற்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டபோதே ஐ. தே. கவிற்குள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு அடுத்தது யார் என்ற கேள்வியும், அதனோடு போட்டியும் சேர்ந்தே எழுந்தது. அவ்வேளையில், டி. பி. யின் கவனம் காமினி திசாநாயக்காவின் மீதே இருப்பதாகவும் விமரிசிக்கப்பட்டது.

ஆனால், காமினி திசாநாயக்காவின் வருகை ஐ. தே. கவிற்குள் எழுப்பிய சர்ச்சையும், பொதுச் செயலாளர் சிறிசேன கூரே வெளியேற்றப்பட்டதன் விளைவும், பிரேமதாசா குடும்பத்தினர் ஐ. தே. கவிற்கு எதிராக எழுப்பிய கண்டனங்களும், டி.பி விஜேதுங்காவை தான் விரும்பியவாறு காய்களை நகர்த்த முடியாமல் செய்தது. இந்நிலையில், அடுத்து செய்து கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின்போது காமினி எதிர்பார்த்த அமைச்சர் பதவி அவருக்கு வழங்கப்படவில்லை என்பதோடு, ஐ. தே. கவின் அடுத்த வாரிசு என்ற நிலைக்கும் அவர் உயர்த்தப்படுவது தவிர்க்கப்பட்டது.

அத்தோடு அனுராதபுரத்தில் நடந்த கூட்டமொன்றில் டி.பி. விஜேதுங்கா ரணில்தான் ஐ தே. கட்சியின் அடுத்த வாரிசு என்றும் அறிவித்தார். இந்நிலையில் காமினி திசாநாயக்கா ஐ. தே. கவின் தலைமைப் பதவியைப் பிடித்துக் கொள்வதில் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளார்-

இதேசமயம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, காமினி திசாநாயக்கா ஐ. தே. கவிற்குள் மீண்டும் கொண்டு வரப்பட்டபோதே அதிருப்தி உற்றிருந்தார்- அப்போதைய பொதுச் செயலாளர் சிறிசேன கூரேயுடன் சேர்ந்து இதனை எதிர்க்க முற்பட்டார்- ஆயினும், இறுதியில் பின்வாங்கினார்- இப் பின்வாங்கலுக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே-ஆர்- ஜெயவர்த்தனா பின்னணியில் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது-

ஆனால் தற்பொழுது டி. பி. விஜேதுங்கா காமினி திசாநாயக்காவிற்கு வழங்கி வந்த ஆதரவை ஓரளவிற்கு விலக்கிக் கொண்டுள்ளமையும், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத்தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தும் கட்சியில் தனது நிலைமையை உறுதிப்படுத்துவதில் ரணில் விக்கிரமசிங்காவும் தீவிர ஈடுபாடு காட்டத் தொடங்கினார்.

## வாரிசுப்போட்டி

இந்த வகையில் ஐ. தே. கவின் அடுத்த வாரிசிற்கான போட்டியில் களத்தில் இறங்கியுள்ள காமினி திசாநாயக்காவும், ரணில் விக்கிரமசிங்காவும் இரண்டுவகையில் தமது நிலைகளை தக்கவைத்துக் கொள்வதில் முனைப்பாகவுள்ளனர். ஒன்று மக்கள் மத்தியில் இருந்து அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஐ தே. கவின் அடுத்த வாரிசுதான் எனறநிலையை உருவாக்குவது. இரண்டு தமக்குச் சார்பான அணியினரை பெரும் அளவில் பாராளுமன்றத்திற்குள் அனுப்பி கட்சிக்குள் தமது பலத்தை அதிகரிப்பது.

இந்த இரு அம்சங்களின் அடிப்படையிலேயே காமினியும், ரணிலும் தமது தேர்தல் மாவட்டங்களின் தெரிவு உட்பட, தாம் போட்டியிடும் தேர்தல் மாவட்டங்களின் வேட்பாளர் பட்டியல் தயாரிப்பு வேலைகள் வரை மேற்கொண்டதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகின்றது. இதே சமயம் இவ்விடயத்தில், அதிகாரபீடத்தின் முடிவையோ அன்றி விருப்பத்தையோ அவர்கள் பிரதிபலிக்கவோ, அன்றிக் கேட்டுக் கொள்ளவோ தயாராக இருக்கவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் அடிப்படையிலேயே, காமினி திசாநாயக்கா தனது முன்னைய தேர்தல் மாவட்டமான நுவரேலியாவில் இருந்து கண்டிக்கும், ரணில்விக்கிரமசிங்கா கம்பஹாவில் இருந்து கொழும்பிற்கும் மாற்றிக் கொண்டனர்.

## கொழும்பும் ரணிலும்

சம்பஹா மாவட்டத்தில் இருந்து ரணில் கொழும்பு மாவட்டத்திற்கு தன்னை மாற்றிக் கொண்டமைக்கு வேறு காரணங்களாக எதனைக் கூற முறபட்டாலும், கம்பஹா மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதித்தலைவரான சந்திரிகா குமாரணதுங்காவிற்கு உள்ள தனிப்பட்ட செல்வாக்கே காரணம் என அரசியல் விமர்சகர்கள் எவரும் கருத்து வேறுபாடு இன்றித் தெரிவிக்கின்றனர்.

இதற்கு கடந்த மாகாண சபைத் தேர்தலில் 2,000000 க்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளை சந்திரிகா பெற்றுக் கொண்டதோடு, அத்தேர்தலில்பிரதமரின் தொகுதியில் ஐ. தே.க. தோல்வியுற்றதையும் சுட்டிக் காட்டுகின்றனர். அத்தோடு, இன்றைய நிலையில் சந்திரிகா குமாரணதுங்கா 3,00000 அதிகமான விருப்பு வாக்குகளை பெறுவார் எனவும் எதிர்பாாக்கப்படுகின்றது. இந்நிலையில், கட்சி தோல்வியைத் தழுவினும் விருப்பத்திற்குரிய வாக்குகளையாவது கூடுதலாகப் பெற்றுக்கொள்வதில் ரணில் அக்கறையாகவுள்ளார்.

ரணிலின் இம்முடிவிற்கு கொழும்பு மாவட்டத்தில் ஐ. தே. கட்சியின் அமைப்பு பலவீனமான நிலையில் இருந்ததும் வாய்ப்பாக அமைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா, அதன் பின்னர் சிறிசேன கூரே ஆகியோர் அமைப்பாளராக இருந்தபோது மிகவும் பலமான நிலையில் இருந்த ஐ. தே. க, பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர், கூரே செயலாளர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் உட்கட்சிப்பூசலில் பெரிதும் பலவீனப்பட்டுப் போயுள்ளது. இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்கா நுழைந்து கொள்வது இலகுவானதாகவே இருந்தது.

அத்தோடு, ரணில்விக்கிரமசிங்கா கொழும்பு மாவட்டத்திற்குள் நுழைவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியில் பலமான எதிர்த்தரப்பினர் இல்லை என்பதும் காரணமாகும். எதிர்த்தரப்பின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான திருமதி சிறிமானி அத்துலத்முதலியின் முதற் தேர்தல் பிரவேசம் என்பதினால் அவரைவிடக் கூடுதல் விருப்பத்திற்குரிய வாக்குகளை பெறுவது இலகுவானது என்றே ரணில் கருதியிருக்கக் கூடும்.

இந்நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்கா கொழும்பு மாவட்டத்திற்குள் பிரவேசிக்க முடிவு செய்தார் எனலாம். அத்தோடு தலைமை வேட்பாளராக நியமனம் பெற்ற ரணில் விக்கிரமசிங்கா தனக்கு எதிரானவர்கள் மற்றும் தன்னைவிட கூடுதலான விருப்ப வாக்குகளைப் பெறக் கூடியவர்கள்/ பெறக்கூடியவர்கள் என எதிர்பார்ப்பவர்களையும் கொழும்பு மாவட்ட தேர்தல் களத்தில் இருந்து வெளியேற்றினார்.

இதன் அடிப்படையிலேயே ஹேமா பிரேமதாசா வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார். இந் நீக்கமானது டி. பி. விஜேதுங்காவின் விருப்பத்திற்கு மாறானதாக இருந்த போதும் ரணில் அதைப் பொருட்படுத்தவில்லை.

இதேசமயம் ரணில் விக்கிரமசிங்கா கொழும்பு வேட்பாளர் நியமனப் பத்திரம்தாக்கல் செய்யும்போதே தனது ஆதரவாளருக்கும், தனது கொள்கையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தவர்களுக்குமே வேட்பாளர் பட்டியலில் இடம் கொடுத்தார். இந்த வரிசையில் அநுரா பஸ்தியான், கருணாசேன கொடிதுவக்கு. சுசில்முனசிங்கா, காமினிலொக்குகே ஆகியோர் இடம்பிடித்தனர். ஏனையோர் நிபந்தனையுடன் பட்டியலில் இடம்பெற்றனர். இதற்கு ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆதரவாளர்களுக்கு ரணில்விக்கிரமசிங்காவிதித்த நிபந்தனையே சிறப்பான உதராணமாகும்.

பிரேமதாசாவின் கொள்கை தொடர்பாகவும், அவர் தொடர்பாகவும்பேச்சுக்கள் எடுக்கமாட்டோம் எனஉறுதி பெற்ற பின்பே வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்கப்பட்டது. இந்தவகையிலேயே ஒஸி அபயசேகரா, வீரசிங்க மல்லிமாராச்சி, சங்கதாசா, ரட்ணஹெறி ராஜபக்சா, ஸ்ரான்லி திலகரெட்ண ஆகியோருக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைத்தது. இதேசமயம் இவர்கள் யாவரும் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு இரு தினங்களுக்கு முன்னர் சுச்சரித்த இயக்கத்தின் காரியாலயத்தில் ஹேமா பிரேமதாசாவின் தலைமையில் கூடி பிரேமதாசாவின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாக உறுதி மொழி செய்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தோடு கொழும்பு மாவட்ட பட்டியலில் இடம் பிடித்தோரிடம் வேறு ஒரு அழுத்தமும் பிரயோகிக்கப்பட்டது. தமது ஆதரவாளர்களிடம் விருப்பத்திற்குரிய வாக்குகளில் ஒன்றை ரணில் விக்கிரம சிங்காவிற்கு இட வேண்டும் எனவேட்பாளர்கோர வேண்டும் என்பதாகும். இவ் அழுத்தமானது ஜே.ஆர். ஜெயவர்த்தனா மூலம் அவரது ஆதரவாளரான அனுரா பஸ்ரியன், சுனில் முன சிங்கா மீதும், பிரேமதாசா ஆதரவு வேட்பாளர்மீது சிறிசேன கூரே மூலமும் போடப்பட்டது.

இதே சமயம், கொழும்பிலுள்ள சிறுபான்மையினரான முஸ்லிம்கள், தமிழர்கள் ஆகியோரினதும் வாக்குகளிலும் ரணில் குறியாக இருப்பதினால் அவர்களின் வேட்பாளர் நியமனத்திலும் அவர் அவதானமாகவே இருந்தார். முஸ்லிம்களுக்கு இருவரையும், தமிழருக்கு ஒருவரையும் வேட்பாளர் பட்டியலில் கேட்டுள்ளதன் மூலம் மூன்றாவது விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்வதில் அவரின் கவனம் தெளிவாகவே புலப்பட்டது.

## காமினியும் கண்டியும்

இவ்வாறாக, ரணில் விக்கிரமசிங்கா, தேர்தல் மாவட்டங்களை மாற்றியதோடு தம்மைப் பாதிக்கும் தடைகளையும் அகற்றிக் கொண்டிருந்த அதேவேளை, காமினி திசாநாயக்காவும் அவ்வாறானதொரு முயற்சியில், ஆனால் சற்று மாறுபட்ட ரீதியில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

இதுவரை நுவரேலியா மாவட்டத்தைத் தனது தேர்தல் மாவட்டமாகக் கொண்டிருந்த காமினி திசாநாயக்கா, கண்டி தேர்தல் மாவட்டத்தின் தலைமை வேட்பாளராக தன்னை மாற்றிக் கொண்டார். இறுதியாக நட.ந்த பாராளுமன்றத் தேர்தலின் போது நுவரேலியா மாவட்டத்தில் போட்டியிட்டு மிக உயர்ந்தளவு விருப்பத்திற்குரிய வாக்குகளைப் பெற்றிருந்த காமினி திசாநாயக்கா கண்டிக்குஇம்முறைமாற்றிக்கொண்டமையானது. ஐ. நே. க. சார்பில் போட்டியிட்டாலும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மூன்று வேட்பாளர்களைநிறுத்திபுள்ளமையே ஆகும்.அத்தோடு, கடந்தமாகாணசபைத் தேர்தலிலும் நுவரேலியா மாவட்டத்தில் அவரின் ''இமேஜ்'' கணிசமாக பாதித்திருந்தது.

கடந்த தேர்தலின் போது இ. தொ.கா. இரண்டு வேட்பாளரை மட்டும் நிறுத்தியிருந்ததினால் மலையகத் தமிழ் மக்களின் மூன்றாவது விருப்பத்துக்குரிய வாக்கில் அனேகமானவை காமினிக்கே கிடைக்கப் பெற்றது.ஆனால்' இம்முறை அவ்வாறானதொரு நிலை இல்லை. இ.தொ.கா. மூன்று வேட்பாளரைப் பெற்றுக் கொண்டதிலால். காமினி திசாநாயக்கா, தான் எதிர்பார்க்கும் உயர்ந்தளவு விருப்பத்துக்குரிய வாக்கை நுவரேலியா மாவட்டத்தில்பெறுவதுசாத்தியமற்றதொன்றாகவேஇருக்கும்

அத்தோடு நுவரேலியா மாவட்டத்தில், ஐ. தே. கவிற்குள் உள்ள உட்கட்சி முரண்பாடும் பலமானதாகவே உள்ளது. காமினி திசாநாயக்காவை வன்மையாக எதிர்க்கும் ரேணுகா ஹேரத் வாக்காளர்களில் கணிசமான செல்வாக்குச் செலுத்தக் கூடியவராக இருப்பதினால், ஐ தே. க. வாக்குகளிலேயே கணிசமானவை காமினிக்குக் கிடைப்பது சந்தேகமே.

இந்நிலையில் நுவரேலியாவைவிட காமினிக்குக் கண்டியில் சாதகமான நிலை இருப்பதாகவே கொள்ளலாம். இங்கு இ. தொ. கா. சார்பில் ஒருவரே போட்டியிடுவதால் விருப்பத்திற்குரிய வாக்குகளில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்படாது என்பதோடு, முஸ்லிம்கள் தரப்பில் இருவர் போட்டியிடுவதால் மூன்றாவது விருப்பு வாக்கில் பெரும்பாலானவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் கருதுவதாகத் தெரிகின்றது.

இதேசமயம் கண்டித் தேர்தல் மாவட்டத்தில் காமினி திசாநாயக்காவிற்குப் பலமானதொரு ஆதரவு அணியும் உருவாகியுள்ளது. இவ் அணியில் சரத்அமுனுகம, சந்திரமன் டீ சில்வா, லகி ஜெயவர்தனா, திஸ்ஸ அத்தநாயக்காசந்திரா, கருணாரத்தின ஆகியோர் உள்ளனர். இவர்கள் தமது ஆதரவாளரிடம் தமது விருப்பு வாக்குகளில் ஒன்றைக் காமினிக்கே இடுமாறு பகிரங்கமாகவே வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் கண்டி பௌத்த நிலையத்தில் காமினி திசாநாயக்காவின் தலைமையில் கூடிய இவர்கள் கண்டி மாவட்டத்தில் யார் யார் ஐ. கே. கவிற்கு வாக்களிக்கின்றார்களோ அவர்களின் விருப்பத்தெரிவு வாக்கு காமினி திசாநாயக்காவிற்கு அளிக்கப்பட வேண்டும் என்றும். இதன்மூலம், கண்டி மாவட்டத்தில் இருந்து அடுத்த ஐ. தே. க. தலைமை உருவாக வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் பிரகாரம் ஐ.தே. கவின் தேர்தல் வியூகம் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிரானது மட்டுமல்ல, ஐ. தே.கவிற்குள் காணப்படும் உள்முரண்பாடு, அடுத்த தலைமைத்துவத்திற்கான போட்டி என்பனவற்றுடனும் நெருக்கமானதாகவே உள்ளது. இத் தலைமைத்துவத்திற்கான போட்டி கட்சிக்குள் பிரதேச வேறுபாட்டை தோற்றுவித்து வாக்கு வேட்டையில் ஈடுபடும் அளவுவரையும் வந்துள்ளது - இந்நிலையில் தேர்தலில் தோல்வியா? வெற்றியா? என்பதில் உள்ள அக்கறையைவிட எதிர்க்கட்சி ஆயினும், யார் தலைவர் என்ற முயற்சியிலேயே காமினியும், ரணிலும் இறங்கியிருப்பதாக தெரிகிறது. இது இம்முறை இல்லாது விட்டாலும் அடுத்தமுறையாவது ஜனாதிபதி பதவிக்கோ, அன்றி பிரதம மந்திரி பதவிக்கோ வைக்கப்பட்டுள்ள குறியே இது ஆகும். ஆனால் இவை யாவற்றையும் தீர்மானிக்கவேண்டியவர்கள சிங்கள மக்களே.

ஜெயராஜ்

# அந்திம காலத்தில் ஜனதாதளம் உட்கட்சி பூசலின் உச்ச கட்டம்

> நான் தலைமை ஏற்கமாட்டேன்
> அதனால் கட்சி உடையுமானால்
> அப்படியே ஆகட்டும் - வி. பி. சிங்

88-ல் இந்தியப் பாராளுமன்றத்தில் தனது அமைச்சிலுள்ள ஊழல்களையும், தனது கட்சி உறுப்பினர்கள் செய்யும் மோசடிகளையும் பகிரங்கமாக விளாசித் தள்ளிக்கொண்டிருக்கிறார், ஓர் அமைச்சர். இந்திய அரசியல் வரலாற்றில், ஊழல்கறைபடிந்த பாராளுமன்ற படிக்கட்டுக்களில், திருவாளர் பரிசுத்தம் உருவாகியிருப்பதாக பத்திரிகைகள் பாராட்டுகின்றன. தனது நிலையை இன்னும் வலியுறுத்துமாப் போல் இந்திரா காங்கிரசிலிருந்து வெளியேறி, ஜனதா தளத்தை உருவாக்கி, காங்கிரசுக்கு சமனான ஒரு சக்தியாக தேசிய முன்னணியை தோற்றுவித்து ஒரு வருடம் பூர்த்தியாவதற்குள் திருவாளர் பரிசுத்தம் எனப் பாராட்டப்பட்ட அந்த அமைச்சர் பிரதமராகிறார்,

விஸ்வநாத் பிரதாப் சிங். என்ற தனிநபரின்மேல், நாடு கொண்டிருந்த எதிர்பார்ப்புகள் ஏராளம். இரண்டாவது முறையாக காங்கிரஸ் தவிர்ந்த எதிரணி ஆட்சியைப் பிடித்திருந்த அரசியல் திருப்பம் சக்தி மிகுந்த கட்சியாக விளங்குவது ஜனதா தளம்.

காட்சி மாறுகிறது. ஆளுங்கட்சியாக திகழ்ந்த ஜனதா தளம், ஆறே ஆறு வருடங்கள்ல், ஆட்சியிழந்து, ஒடுங்கிப்போய் சீர்குலைந்து சின்னா பின்னப்பட்டு, நாளொரு பிளவாக சிதைந்துபோய் நிற்கிறது. தலைமைப் பதவியை ஏற்பதற்குக்கூட ஆள் தேடும் அவலநிலையில் தனது இறுதிக் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கிறது ஜனதா தளம் இந்த நிலை யாரால் ஏற்பட்டது, காரணங்கள் என்ன என்ற பிரதே பரிசோதனைக் கேள்விகள் கூட தேவையற்றுப்போய் விடுமாப் போல், கட்சி தனது முகவரியையே இந்திய அரசியலிலிருந்து விலக்கிக்கொள்ளதானே முயன்று வருகிறது.

தற்கொலை செய்துகொள்வதுதான் ஜனதா தளத்தின் உண்மையான இலட்சியம். 89இல் பதவிக்கு வந்ததிலிருந்து அதன் தலைவர்கள் இந்த இலட்சியத்தைஎட்டுவதற்காக கடுமையாக உழைத்து வருகிறார்கள் என இந்தியப் பத்திரிகையொன்று குறிப்பிட்டுள்ளது. இது, ஜனதாதளம் பிளவுபட்டமைக்கு கேலியாக குறிப்பிட்ட இக்காரணம், உண்மையும் அதுதான் என்பதை உணர்த்திவைத்திருக்கின்றது.

88இல் ஆட்சி மாற்றம் தேவையென்பதற்காக மத அடிப்படை வாத பாரதீய ஜனதாவும், மதச் சார்பின்மையான இடதுசாரிக் கட்சிகளும் ஜனதா தளம் தலைமையிலான தேசிய முன்னணி ஆட்சிக்கு வருவதை ஆதரித்தன. இரு வேறு துருவங்களான கொள்கையுடையவர்களுக்கிடையில் ஜனதாதளம் சிக்குண்டிருப்பதுநல்ல தொடக்கமல்ல என்பதை ஆரம்பத்திலிருந்தே அரசியல் அவதானிகள் கூறி வந்தனர்.

இது மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்தத் தொடங்கிய வேளையே பகிரங்கமாகத் தெரிய வந்தது. பிற்பட்டவர்களுக்கான தொழில், கல்வி வாய்ப்புக்களால் அதிக இட ஒதுக்கீடு என்ற மண்டல் கமிஷனின் பரிந்துரைகளை நிச்சயம் அமுலாக்குவோம் என கூறி வந்த ஜனதா தளம், அதைச் செயற்படுத்த முனைந்தபோது பெரியளவிலான எதிர்ப்பை எதிர்நோக்கியது- பிற்பட்டவகுப்பல்லாத மாணவர்கள் பலர், இந்தியாவின் முக்கிய நகரங்களில் செய்த ஆர்ப்பாட்டங்கள், தீக்குளிப்புக்கள் ஜனதா தள அரசை ஆட்டம் காணச் செய்தன.

இது தவிர, ஜனதா தள அரசு சிறுபான்மையினருக்கு காட்டி வந்த அனுதாபமும், இத்தத்துவத்தில் ஊறியிருந்த அடிப்படை வாத இந்துக்களை கோபம்கொள்ள வைத்தது, டில்லி ஷாஹி இமாம் சையத் அப்துல்லா புகாரி ஜனதா தளத்தில் முக்கிய தலைவராக கருதப்பட்டார். முஸ்லிம்களின் பால் அரசு சார்பு கொள்வதாக இந்து அடிப்படை வாதிகள் கூற இது ஏதுவாக அமைந்தது.

ஜனதா தளத்தில் ஆட்சிக் காலம் முடிவுக்கு வர இவை தவிர, பிரதமர் பதவியில் ஒரு கண் வைத்திருந்த சந்திரசேகரின் பதவி ஆசை, அவருக்கு சாமரம் வீசி வந்த ஜனதா தள தலைவர்கள் சிலர், இவர்களை பின்னிருந்து ஊக்குவித்த இந்திரா காங்கிரஸ் என்பனவும் காரணமாயின-

ஹரியானாவின் கிழட்டுச் சிங்கம் தேவிலாலும், அவரது மகனும், மேஹம் சட்டசபைத் தேர்தலில் நடாத்திய வன்முறைகளை, மூடிமறைக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள், தேசிய முன்னணியின் அங்கத்துவ கட்சிகளினுள் ஏற்பட்ட உட் பூசல்கள், எல்லாமாக தனக்குத்தானே ஜனதா தளம் மண்ணை வாரிப்போட்டுக் கொள்வதை காட்டின.

ஆட்சிக்காலம் முடியுமுன்பே சிதறுண்ட ஜனதாதளம் இன்னொரு பொதுத் தேர்தலை எதிர்கொண்டது. தேர்தல் காலத்தில் மட்டும் தாங்கள் ஒற்றுமையாக இருப்பதை ஜனதாதளம் தீவிரமாக காட்டமுயன்றது. மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை மக்களால் நிராகரிக்கப்பட்டமைக்கு தானே காரணம் எனக் கூறி, வி. பி. சிங் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகினார் அன்று ஆரம்பித்த தளர்வு இன்று உச்சத்திற்கு போயுள்ளது. எஸ். ஆர். பொம்மை, ஓரளவுக்கு கடசியை நிலைப்படுத்திக்கொள்ளமுயன்றாலும் நட்சத்திர கவர்ச்சியற்ற அவரால் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

மத்தியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம், காங்கிரஸ் ஆட்சிக்கு, அறுதிப்பெரும்பான்மை கிடைக்காத நிலையில், இருந்த ஜனதாதள எம். பி. களையும் தனக்குள் இழுக்க காங்கிரஸ் தொடர்ந்து முயன்றது. 92-ம்ஆண்டுடிசம்பர்10ந்திகதி பாரதீய ஜனதா கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டாலும், தனது நூலிழை வெற்றியை நரசிம்மராவ் தொடர்ந்தும் பேணத் தயாராக இருக்கவில்லை. ஜனதா தளத்தில் புகைந்து கொண்டிருந்த பூசல் காங்கிரசினால் ஊதிப் பெரிதாக்கப்பட்டது, மீண்டும் ஜூலை 93-இல் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம், ஜனதா தளம் தோற்றம்காண கடுமையாக உழைத்த அஜித் சிங், தனது குழுவினருடன் காங்கிரசுள் பாயவைத்தது.

ஜனதாதளம் கண்ட இரண்டாவது மிகப் பெரிய பிளவு இது. எப்போதாவது போகத்தான் போகிறார் இப்போது போனதால் என்ன ஆயிற்று என்று ஜனதாதள தலைவர்கள் சிலர் திருப்திப்பட்டுக் கொண்டார்களாம்.

தொடர்ந்து, சென்ற ஆண்டு டிசம்பர் 6ந் திகதி நடைபெற்ற உத்தரப்பிரதேசம், இராஜஸ்தான், இமாச்சலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் சட்டசபைக்கான தேர்தலில் ஜனதாதளத்தின் மக்களாதரவு, எந்தளவுக்கு குறைந்தது என்பதை தெளிவாக எடுத்துக்காட்டியது.

உத்தரபிரசேத்தில் 91 இடங்களிலிருந்து 27 ஆகவும், ராஜஸ்தானில் 54 இலிருந்து 6ஆகவும், இமாச்சலப் பிரதேசத்தில் 11 இலிருந்து எதுவித இடங்களும் பெறாமலும் மத்தியப் பிரதேசத்தில் 28 இலிருந்து 4ஆகவும் பெற்ற இடங்கள் வீழ்ச்சி கண்டன.

இந்த தோல்விகளைத் தொடர்ந்து எஸ்.ஆர். பொம்மை பதவி விலகினார். கட்சித் தலைமையில் ஏற்பட்ட வெற்றிடம், கட்சி மீண்டும் வி.பி. சிங்கை தலைவராக வரும்படி கேட்டுக் கொண்டது. இந்த நிலையில் மூன்றாவது பெரிய பிளவு ஏற்படக்காரணமாகியது.

**ரகுராம்**

ஜனதா தள தலைவராக பிற்படுத்தப்பட்ட ஒருவரே வரவேண்டும் எனக்கூறி பதவியை ராஜினாமாச் செய்த வி.பி.சிங், ஜனதா தளத்தின் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டால் கட்சியின் நம்பகத்தன்மையும், தன்னுடைய நம்பகத்தன்மையும் போய்விடும் எனக்கூறி ஒதுங்கினார். அவர் ஒதுங்க ஒதுங்க தலைவர் பதவியை ஏற்றுக் கொள்ளச் செய்யும் நெருக்குதல்களும் அவரை நெருங்கின வி.பி.சிங்கிற்கு ஏற்பட்ட இரத்தப் புற்றுநோய்க்கான அறிகுறிகளைத் தொடர்ந்து வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று இந்த நெருக்குதல்களிலிருந்து சில காலமாவது தப்ப முயன்றார் வி.பி.சிங்

மீண்டும் நாடு திரும்பி வந்ததும், நடைபெற்ற கட்சியின் உயர் நிர்வாகிகள் கூட்டத்தில் பிளவுக்கான முதற்கட்ட அறிகுறிகள் தோன்றின எஸ்.ஆர். பொம்மை, ஒரிசா முதலமைச்சர் பிஜு பட்நாயக், பீகார் முதலமைச்சர் லல்லு பிரசாத் யாதவ், முன்னாள் அமைச்சர்கள் ராம்விலாஸ்பஸ்வான், மது தண்டவதே கலந்து கொண்ட இக் கூட்டத்தில் முன்னாள் கர்நாடக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே, முன்னாள் அமைச்சர்கள் ஜார்ஜ் பெர்ணான்டஸ், ஐ.கே.குஜ்ரால் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை. இது பிளவு ஏற்படப் போவதை தெளிவாக காட்டியது இதை வி பி. சிங்கும் ஒத்துக்கொண்டார் நான் தலைமை ஏற்கமாட்டேன். அதனால் கட்சி உடையுமானால் அப்படியே ஆகட்டும் என அக்கூட்டத்தில் தெரிவித்தார். டி பி சிங் எனவே பிளவை எதிர்பார்த்தே இருந்தது ஜனதா தளம் என்பது தெரிந்த விடயமாகி விட்டது.

தொடர்ந்து இது உறுதியாகும் வண்ணம், ஜார்ஜ் பெர்ணான்டஸ் 14 எம்பிக்களுடன் பதவி விலகி போட்டி ஜனதா தளத்தை அமைத்தார் உடைந்த ஜனதா தளம் இணைய வாய்ப்பில்லை என அவர் சமரச முயற்சி எடுத்தவர்களிடம் கூறியுள்ளார். இந்நிலையில் வி பி. சிங், கட்சிப் பிளவில் எந்த பக்கத்தை ஆதரிப்பார் என்பதை கூற மறுத்து விட்டார்- அவரே தனது கட்சியின் இறுதிக் காலம் நெருங்கிவிட்டதை உணர்வதன் வெளிப்பாடாக இது அமைந்தது-

இந்தப் பிளவு, ஜனதா தளத்தின் கையிலிருக்கும் இரண்டு மாநிலங்களான ஒரிசாவையும் பீகாரையும் கூட சிக்கலில் மாட்டி வைத்துள்ளது-

ஏற்கனவே வைஷாலி இடைத்தேர்தலில் தோற்றுப் போயிருக்கும் லல்லு பிரசாத் யாதவுக்கு, பீகாரின் சட்டசபையிலுள்ள 50 எம் எல் ஏக்கள் ஜார்ஜ் பெர்ணான்டஸ் அணியில் இயங்க முடிவெடுத்திருப்பதும் தலைவலியைத் தந்திருக்கிறது-

ஒரிசாவின் நிலைபற்றி அதன் முதலமைச்சர் பிஜு பட்நாயக் வி.பி.சிங் தலைவராக வராத பட்சத்தில் கட்சிக்கு யார் வோட்டுப் போடுவார்கள்? அடுத்த தேர்தலில் யாரைத் தலைவராகக்காட்டி வோட்டை வாங்குவது என குழப்பத்தில் சூழ்ந்துள்ளார்-

இதனால் அடுத்த ஆண்டு இருமாநிலங்களினதும். நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தல்கள் வரை அங்கு ஜனதா தள ஆட்சி நீடிக்குமா என்பதும் சந்தேகத்துக்குரிய தாகிவிட்டது.

இந்நிலையில் ஜனதா தளத்தின் முக்கிய தலைவரான ராமகிருஷ்ண ஹெக்டே காங்கிரசில் சேர்ந்துகொள்ள யோசித்திருப்பதாக அவரது ஆதரவாளர்கள் கூறியுள்ளனர்.

ஒட்டு மொத்தமாக, ஜனதா தளத்தின் தலைவர்களே ஆளுக்கொரு பக்கமாக பிரியும் பட்சத்தில் அதன் தொண்டர்களின் நிலைப்பாடு சொல்லத் தேவையற்றதாகி விடுகிறது.

ஒன்றுமட்டும் உண்மை. ஜனதாதளம் பற்றி இனிமேல் வெளிவரும் எச்செய்தியும் யார் யார் கடைசியாக கட்சியை விட்டு விலகியுள்ளார்கள் என்பதையே அறிவிக்கும் என்பதும் மட்டும் நிச்சயமாக தெரிகிறது.


## 3ஆம் ஆண்டு நினைவாக



பிறப்பு:-
24. 11. 1971

வீரச்சாவு:-
29. 07. 1991

### லெப். கர்ணன்

(தவரட்ணம் வெஸ்லி தவேந்திரன்)

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை, ஹாட்லிக்கல்லூரி மாணவர் முதல்வன்)

மண்ணின் மானம் காக்கச் சிலிர்த்தெழுந்த மறத்தமிழா
கண்ணில் பொறி பறக்கக் களங்கள் பல கண்ட மைந்தா
செங்குருதிக் களங்கண்ட செந்தமிழர் வாழ்வதனை
சிந்தையில் கொண்டுன்னை அர்ப்பணித்தாய் தமிழ்த்தாய்க்கே.

1-ம் கட்டை
சத்தியபுரி,
தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர், நண்பர்கள்.

(8952)



## தேவை

1. தொழில் முகாமையாளர் (Works Manager)

அச்சக வேலைகளில் அனுபவம் உள்ள ஆண்கள் தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும்.

2. அச்சு இயந்திர இயக்குனர் (Machine Minder)

சைனா பிளேட்டின் மெசின் இயக்கி அனுபவம் உள்ளவர்கள் தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

வி. இல. 342 மே/பா ஈழநாதம்,
மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9998)

யாழ்ப்பாணம் நல்லூர் ...

## பிரிட்டிஷ்

...லும் தடைகளாகாது எனவும் இளவரசரால் துணிந்து கூற முடிந்துள்ளது.

இருப்பினும இங்கிலாந்து மக்களாட்சிடைக்கொண்டது. மக்கள் பிரதிநிதிகளே அங்கு நிறைவேற்று முடிவுகளை மேற்கொள்கின்றனர். அரச குடும்ப செலவுகளுக்கு நிதி ஒதுக்குவதும் அவர்கள் தான்.

நாம அரச குடும்பத்திற்கு இவ்வளவு தொகை செலவிடத் தேவையில்லை. ஆடம்பரங்களை அவர்கள் குறைத்துக் கொள்ள வேண்டும். அரசியலில் அவர்களது பங்களிப்புத் தேவையற்றது. எனக்கூறும் இளைஞர்களின் தொகை அதிகரித்தே வருகிறது இதனால் அரசகுடும்பத்திற்கு எதிரான குரல்கள் இளம்மட்டங்களில் கனமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளமை நாளடைவில் அரச குடும்பத்தினருக்கு ஆபத்தானதாக அமைந்து விடக்கூடும்.

எது எவ்வாறு இருப்பினும் இளவரசரது மன்னராகும் வாய்ப்பு கை நழுவி அவரது மகனான வில்லியமுக்கே கிடைக்கும் என நம்பப்படுகிறது ஏனெனில் தனது90-வது வயதிலும் மிகவும் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் திகழும் மகாராணியார் நீண்டகாலம்நீடித்திருப்பார். இதனால் இளவரசர் சாள்ஸ் இற்கு இச்சந்தர்ப்பமே கிடைக்காமலே போய் விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

## பாலைவனப் புயல்

பட்ட சர்வே இதையெல்லாம் உறுதியாக மறுக்கிறது. குவைத்தை விட்டு வெளியேறுமுன் ஈராக்கியப் படைகள் பல எண்ணெய்க் கிணறுகளுக்குத் தீவைத்து விட்டுச் சென்றது. இதனால் வெளி வந்த அடர்த்தியான புகையில் அமெரிக்கப் போர் வீரர்கள் போரிடும் சூழ்நிலை ஏற்பட்டதால் நோய்கள் உண்டாகியிருக்கலாம் என்று சில மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை ஓடியாடி உல்லாசமாகத்திரிந்து கொண்டிருந்தவர்கள், இப்போது கைத்தடியுடன் நடக்க வேண்டிய நிலை சிலருக்குக் கை, கால் முகமெல்லாம் அடிக்கடி வீங்கிப் போகிறது. பலருக்குத் தோல் நோய்கள்.... இரசாயனப் பொருட்கள் உடலில் தங்கிவிட்டதால், பிறக்கப் போகும் குழந்தைகளும் கூடக் குறைபாடுகளுடன் பிறக்கும் அபாயம் உள்ளது.

மொத்தத்தில், நரக வாழ்க்கையை இங்கேயே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் இந்த ஆயிரக்கணக்கான படைவீரர்கள்! தங்களது வீரர்கள் ஈராக்கின் இரசாயன ஆயுதங்களிலிருந்து பாதிக்காமல் இருக்க, ''வைரிடோஸ் டிக்மைன்ப் ரோமைட்'' என்கிறமருந்துநான்கு லட்சம் அமெரிக்க வீரர்களுக்கு வழங்கப்பட்டது. இதிலுள்ள மூலப்பொருட்கள் சற்று அபாயகரமானவை.

இவற்றை உட்கொண்டதால் அமெரிக்க வீரர்களுக்குப் பின் விளைவுகள் ஏற்பட்டிருக்கலாமோ என்கிற ஒரு கருத்தும் நிலவுகிறது.

''எங்களுக்கு மருந்தும்பணமும் வேண்டாம். எங்கள் நோய் தீர வழிகண்டு பிடியுங்கள்...'' என்று விரக்தியுடன் கூறுகின்றார்கள் இந்த முன்னாள் படைவீரர்கள்.

நன்றி - ஜீனியர் போஸ்ட்

## அர்ப்பணம்

நிருபனின் கை காட்டப்பட்ட திசையை நான் நோக்கினேன். முரளியின் 'பிறேம்' செய்யப்பட்ட படம் மாலை அணிவிக்கப்பட்டு மாட்டப்பட்டுக் கிடந்தது. வீரச்சாவடைந்த திகதி அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

என் விழிகள் ஈரமாயின. மனசு பாறையாய்க் கனக்கத் தொடங்கியது. உதடுகள் நெளிந்து முரளியின் பெயரை மிக மென்மையாக உச்சரிக்கத் தொடங்கின.

# கூட்டணி மனு நிராகரிப்பிற்கு நீதிமன்றம் கொடுத்த விளக்கம்

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையத்தில் குழப்பமேற்பட்டால் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தேர்தல் ஆணையாளரால் கூறப்பட்டிருந்தது. குறித்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாவிட்டால் மாற்று வழி கூறப்பட்டிருந்தது, இவையெல்லாம் குழப்ப நிலையிலும் தேர்தல் நடாத்தப்படலாம் என்பதை பாராளுமன்றம் கருத்திற் கொண்டிருப்பதை காட்டுகின்றது என, தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த யாழ். மாவட்ட தேர்தல் ஆட்சேப மனுவை நிராகரித்தமைக்கான காரணத்தில் உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

பிரதம நீதியரசர் ஜி பி. எம். டி. சில்வா, நீதியரசர்கள் கே. எம். டீ. குலரத்ன, டி. ராமநாதன் ஆகியோர் இம் மனுவை விசாரித்திருந்தனர். வழக்கறிஞர்களின் உரையைக் கேட்ட பின்னர் 1-ம், 2-ம் பிரதிவாதிகள் தேர்தல் நடத்துவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதென்றும், யாழ். மாவட்ட குழப்பங்கள் பிரதிவாதிகளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ளது என்றும். சட்டத்தின்படி தேர்தல் நடாத்துவதால் அடிப்படை உரிமை மீறப்படுகின்றது எனக் கூறமுடியாதென்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது

மேலும், யாழ்ப்பாணத்தில் நியமனப் பத்திரம் தாக்கல் செய்த ஏனைய அரசியற் கட்சிகள் மனுவில் குறிப்பிடாதிருந்தது பெரிய குறைபாடு எனக்கூறி மனுவை தொடர்ந்து விசாரணை செய்ய அனுமதி மறுத்ததற்கான காரணத்தில் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

கூட்டணியின் மனுவில் தேர்தல் ஆணையாளர், யாழ். அரச அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டிருந்தனர்.

## புகைப்படம்

பாடசாலை அதிபர், கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், கிராமசேவகர் ஆகியோரிடம் அத்தாட்சிப்படுத்தலாம்.

பரீட்சார்த்திகள் தமக்குள்ள குறைபாடுகளை பரீட்சை நிலையப் பொறுப்பாளர்களிடம் தெரிவிக்கலாம். அனுமதி அட்டைகள் கிடைக்காதிருப்பின் தற்காலிகமான அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவும் அவர் தெரிவித்தார்.

## தேர்தல் ஆயுதமாகி

எதிலும் ஈடுபடக்கூடாது என்றும், ஆதரவாளர்களை கட்டுப்படுத்தும் அளவுக்கு செல்வாக்கு மிக்க வேட்பாளர்களுக்கே அமைச்சரவை பதவி என்று சந்திரிகா குமாரணதுங்கா வலியுறுத்தி கூறி வருகின்றார்.

வன்முறையைகாரணமாகக் கொண்டு, டி.பி. விஜேதுங்கா தனக்கு சார்பான இரண்டு நிலைகளை உருவாக்கிக் கொள்ளலாம் ஒன்று, தேர்தல் வன்முறையினை சாட்டாக வைத்து, தேர்தலை பின்தள்ளிப் போட்டு, அவசர கால நிலையை தொடரச் செய்யலாம். இரண்டு, அதே வன்முறையில் தேர்தலை நடாத்தி தனக்கு சாதகமான நிலையினை உருவாக்கலாம், ஐ. தே. கவுக்கு ஆதரவான ஆயுதப் படைகளும், ஊரடங்குச் சட்ட அனுமதி அட்டைகளும், டி. பி.க்கு துணை போகலாம். எது எப்படியிருப்பினும் இறுதிவரை, தனக்கு சாதகமாக, எந்த தில்லுமுல்லுகளையும் செய்ய டி. பி. யும் ஆளும் ஐ. தே.கவும் தயாராகவே இருக்கும்.

இதே வேளை இதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள பொது ஜன ஐக்கிய முன்னணி தயாராக இருக்கின்றது என்றே கூற வேண்டும். எனவே தேர்தல் வெற்றியை வன்முறை தீர்மானிக்குமா? எதிரணியினரின் முன் முறைதடுப்பு முயற்சிகள் தீர்மானிக்கும் என்பதை, ஆகஸ்ட் பதினாறில் வாக்காளர் அளிக்கும் பதிலிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

# உலகவங்கியின் நிதியை பயன்படுத்துவதில் தாமதம்

## பெருமளவு நிதி மீளப்பெறப்படுகிறது

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிக்கென உடனடி அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளவென உலக வங்கி வழங்கிய நிதியினை சிறிலங்கா அரசு வடக்கு-கிழக்கில் பயன்படுத்தாததால் அந்நிதியை மீளப் பெறுவதாக, உலகவங்கி அறிவித்துள்ளது.

ஏறத்தாழ பத்து மில்லியன் அமெரிக்க டொலர்களை, இதனால் வடக்கு - கிழக்கு இழக்கவேண்டியுள்ளது. வடக்கு-கிழக்கு தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளில் சுகாதாரம், கல்வி, நீர்ப்பாசனம் என்பவற்றுக்கென வழங்கப்பட்ட மேலும் பதினைந்து மில்லியன் அமெரிக்க டொலர்களையும் உலகவங்கி மீளப்பெறவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான உலக வங்கி ஆணையாளர் கடந்த செவ்வாயன்று கொழும்பிலிருந்து புறப்பட இருந்தார். ஒருவாரகாலமாக கொழும்பில் தங்கியிருந்து இலங்கைக்கான உலக வங்கி திட்டங்களை பரிசீலனை செய்தார்.

இவர் தங்கியிருந்த காலத்தில், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரையும் சந்தித்து நிலைவரத்தை விளக்கினார்.

# சட்ட விரோதமாக செயற்பட்ட 60பொலிஸ் அதிகாரிகள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை

சட்டவிரோதமாக, செயற்பட்ட அறுபது பொலிஸ் உத்தியோகத்தர்களின்மேல் ஒழுக்காற்று நடவடிக்கைகளை பொலிஸ்மா அதிபர் மேற்கொண்டுள்ளார். இதே வேளை, மனித உரிமை மீறல் தொடர்பாகவும், அதிகார துஷ்பிரயோகம், மரக்கடத்தல் ஆகிய குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களில் பொலிஸ் அத்தியட்சகர்களும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் அடங்குவர் எனத் தெரிய வருகிறது.

இவர்களில்,பொலிஸ் தலைமையகத்தில் பணிக்கு அழைக்கப்பட்டவர்கள்குற்றச் செயல்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.குற்றச்சாட்டு தொடர்பாக, கிழக்கிற்கு மாற்றப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் அம்மாற்றத்தை அலட்சியம் செய்துள்ளார் எனவும் தெரியவருகிறது

## தேர்தல்

பொலிசார் சடமைக்கு அனுப்பப்படவில்லை அதனால் தேர்தல் பிரசாரங்களை அங்கு மேற்கொள்ள முடியாதிருப்பதாகஅத்தொகுதிவேட்பாளர்கள் தெரியப்படுத்தியிருக்கின்றனர்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வசதிகருதி தீவுப்பகுதிகளுடன் தொலைபேசி வசதி செய்து தரப்படல் வேண்டும் என்றும் ஆலோசனைக் கூட்டத்தின் போது எமது தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு நீங்கள்இணக்கம் தெரிவித்திருந்தீர்கள் தற்போது கடற்படையினர் ஊடாகத்தான் எமது கட்சியினர் தீவுப்பகுதிகளிலிருந்து தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவேண்டியுள்ளது

எனவே தீவுப்பகுதிகளுடனான தொலைபேசி இணைப்பை உடனடியாக ஏற்படுத்தித்தர ஆவனசெய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தீவுப்பகுதிகளில் அங்கு வாழ்பவர்களைத் தவிர வேறு எவரும் இரவில் தங்க முடியாது எனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதனால் எமது கட்சியினர் அங்கு தங்கியிருந்து பிரசாரம் செய்யமுடியாது அவதியுறுகின்றனர். தீவுப்பகுதியில் நேர்மையாகவும், ஒழுங்காகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் சுதந்திரமாக பிரசாரம் செய்யக்கூடிய சூழ்நிலை அங்கு இருத்தல் வேண்டும். அத்தகைய சூழ்நிலை அங்கு இல்லாதது குறித்து நாம் விசனப்படுகின்றோம். சுதந்திரமாக பிரசாரம் செய்யக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித்தர இயலாத பட்சத்தில் அங்கு வாக்குப் பதிவை ஒத்திவைக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வீரச்சாவு

வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த வீரவேங்கை ஜெனார்த்தன் (சேனாதிபதி சசிக்குமார், பிறஸ் வீதி, சங்கானை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## ஓய்வு

அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தேர்தல் பணிக்கான பொலிஸ் உயர் அதிகாரிகள் இராணுவத் தலைமைப் பீடத்தை சந்தித்து, தேர்தல் நேரத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட உதவுமாறு கேட்டுள்ளார்கள்.

## சர்வதேச

பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமானதாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்த கண்காணிப்பு குழு ஒன்றை அமைக்க வேண்டுமென வேண்டுகோள் விடுப்பதெனவும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும், ஈ. பி. ஆர். எல். எவ் உம் கூடித் தீர்மானித்துள்ளன.

பொதுத் தேர்தலைக் கண்காணிக்க இலங்கைவரும் சர்வதேசக் குழுவில் ஒரு பகுதியினரை யாழ்ப்பாணத்திற்கும் அனுப்ப முடியாதுவிடின் சர்வதேச தொண்டர் அமைப்புகளைச் சேர்ந்தோரை உள்ளடக்கிய குழு ஒன்றினையாவது அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இம் மூன்று கட்சிகளும் தேர்தல் ஆணையாளரைக் கோரவுள்ளன.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994 - 07 - 29 வெள்ளி இரவு

8.01- கலைமஞ்சரி- நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது ''இலக்கணம் இலக்கியம் கற்பித்தல்'' அதனையடுத்துசிறுகதை ''சிதையாத உள்ளங்கள்'' சிறுகதையை அடுத்து கவிதை ''படையொன்றுநகர்கிறது''

8. 25 - கணப்பொழுது

8. 30 - செய்திகள்

8.40- அரசியல் அரங்கம் '' மத்திய கிழக்கு என்னேரமும்வெடிக்கும் வெடிமருந்துப் பொதி''

8. 50 - சிறப்பு நிகழ்ச்சி இலங்கை இந்திய ஒப்பந்தம் நினைவாக'' ஒப்பந்தம் தமிழருக்கு தீ மூட்டிய பந்தம்''

### 1994 - 07 - 30 சனி காலை

7. 02 - மாவீரவணக்கம்

7. 15 - நீங்கள் கேட்டவை

7. 30 - செய்திகள்

7.35- பத்திரிகைச் செய்திகள்

7.40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# இருவருக்கு எரிகாயம்

(யாழ்ப்பாணம்)

எரிந்து கொண்டிருந்த பெற்றோமாக்ஸ் வெடித்ததில் கொக்குவிலைச் சேர்ந்தஇளம் குடும்பஸ்தர்களான கணவன் மனைவி இருவரும் எரிகாயங்களுக்குள்ளாகினர், இவர்கள் நேற்று யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஊர்தி

உரிமையாளருடனும், கோண்டாவில் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்திற்குச் சென்று ஊர்தி உரிமை மாற்றத்தை மேற்கொள்ளலாம் என்பதனை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத்தருகின்றனர்.

## பொ. ஐ. மு

ணிக்கு எதிரான பிரசார நோக்குடன்சுயாதீனதொலைக்காட்சி நிறுவனம் நாடகம் ஒன்றை தயாரித்து வரும் விடயம் தமக்கு தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர் இது குறித்து அதன் தலைவருக்கு எழுதிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## உயர்

வதாகவும், ஏழு ஓய்வு பெற்ற பொலிஸ், இராணுவ விமானப்படை அதிகாரிகள் கொண்ட இக்குழு ஜூன் 24 இல், பாராளுமன்றம் கலைக்கப்பட்டதிலிருந்து செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில், கேணல் தரத்திலுள்ள இராணுவ உயரதிகாரி ஒருவரும் உதவிவருவதாகவும் மேலும்கூறப்படுகின்றது

# மண்ணெய் விநியோகம்

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான, மண்ணெண்ணெய் விநியோகம் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு மாணவருக்கும் தலா 3 லீற்றர் வீதம் வழங்கப்படவுள்ளது

# தேவை

நாசனல் (National) இனத்தைச் சேர்ந்த
மொடல் இல:- J1, J 101,
(Model No.) L 18, L 15, F 70
வீடியோ டெக் இருப்பின் உடன்
தொடர்பு கொள்ளவும்
வி. இல. 343 மே/பா ஈழநாதம்
மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
(சி-9999)


## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
26-07-1968

உதிர்வு:
21 07-1988

**செல்வி மாணிக்கம் - தசந்தி**

**திதி: 1994 - 07 - 29 ஸப்தமி**

ஆயிரம் காலத்துப் பயிர் நீயம்மா
இருபது வருடங்களில் கருகிவிட்டாய்
ஆறவில்லை எம்மனம் அழுகின்றோம்
ஆறாகசொரிகின்றோம் கண்ணீரைத்தினமும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

14, பலாலி வீதி
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அம்மா, சகோதர, சகோதரிகள்
மைத்துனர்கள், பெறாமக்கள்.
(8957)

## 3-ம் ஆண்டுநினைவலைகள்



பிறப்பு
17 — 12 — 1971

வீரச்சாவு
29 — 07 — 1991

**கப்டன் அகிலன்**
(வேலு.மோகனசிறீ)
(கைதடி மேற்கு)

ஆனையிறவில் சமர்களமாடி
ஆகுதியான அரும்பெரும் வீரன்
மா வேங்கையாக வரலாறு தந்தே
தமிழீழமது தாரகமாக
வமிசமுள புகழ் மன்னுவதாகப்
பார காவியம் படைத்தே
வீர சொர்க்கத்து விருந்தாகினையோ.

இவருடன் வீரச்சாவைத் தழுவிய அனைத்து
மாவீரர்களுக்கும் எமது அஞ்சலி.

சீலன் நகர்,
நாவற்குழி.

அம்மா, அண்ணா, அக்கா, தம்பிகள்.
அண்ணி, எழிலரசி (பெறாமகள்).
(8962)

# அணுவாயுத நாடுகளால் கூட கெரில்லாப் போரை வெல்ல முடியாது

- காமினி திசாநாயக்கா

(கண்டி)

பிரபாகரன் இன்று ஒரு கெரில்லா யுத்தத்தை மேற்கொண்டு வருகிறார். அணுவாயுதங்களைக் கொண்டுள்ள அமெரிக்கா போன்ற நாடுகள் கூட இவ்வாறான யுத்தத்தில் வெற்றிபெற முடியாத நிலையே உள்ளது என மகாவலி அபிவிருத்தித் துறை அமைச்சர் காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கண்டியில் உள்ள வத்தேகமவில் நடந்த கூட்டத்தில் மேற்கண்டவாறு பேசிய அவர் தற்போது நிகழும் இனப்பிரச்சினைக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவி திருமதி சந்திரிகா ஒரு நிரந்தரத் தீர்வை கொண்டு வருவார் என்பது கேள்விக்கு அப்பாற்பட்டது. அவருடைய முன்னணி அதிகாரத்தைக் கைப்பற்றினால் இந்நாட்டில் ஒரு இரத்தக் களரியுடனான புரட்சியை உருவாக்குவதில் அவர் வெற்றி பெறுவார்.

இனப்பிரச்சினைக்கு அமைதியானதொரு தீர்வைக் கொண்டு வரும் முயற்சியில் ஜனாதிபதி தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளார். இந்த முயற்சி விரைவில் வெற்றிபெறும். இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கான சகல திட்டங்களும் ஐ.தே. கவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தக் கொடூர யுத்தத்திற்கு ஒரு முடிவு காணப்படும் என்றார்.

## வினாத்தாள்கள் வந்தடைந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் திட்டமிட்டபடி க.பொ.த (உயர்தர) பரீட்சைகள் நடைபெறுமெனயாழ்வலயம் -1 இன் கல்விப்பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நேற்றுமாலை க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கான முதலாம் தொகுதி வினாத்தாள்கள் யாழ் கல்வித்திணைக்களம் வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் இப்பரீட்சைக்கான காகிதாதிகள் தற்சமயம் விநியோகித்து முடிவடையும் நிலையில் உள்ளன. (பா)

## வர்த்தகர் வீடுமீது குண்டுவீச்சு

(திருமலை)

திருமலைப் பகுதியில் வர்த்தகர் ஒருவரின் வீட்டின் மீது கடந்த திங்கள் இரவு 9 மணியளவில் குண்டு ஒன்று வீசப்பட்டது. இதனால் அக்கம்பக்கத்தில் இருந்த மக்கள் பெரும் பீதிஅடைந்தனர்.

இக் குண்டு வீச்சினால் எவரும் காயமடையவில்லை. வர்த்தகப் போட்டி காரணமாக விசமிகள் யாராவது குண்டுவெடிப்பின் பின்னணியில் இருந்திருக்கலாம் என பொலிசார் கூறுகின்றனர். ஆயினும் அப்பகுதியில் வசித்த தமிழர்கள் பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## மஹோற்சவம்

பனிப்புலம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவில் மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை 12.15 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ளது.

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம் றோட்டரக்ட் கழகம் எஸ்.எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவுடன் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று பி.ப. 4-00 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது 90 நிமிடம் நடைபெறும் இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென் அன்ரனிஸ் அணி விளையாடவுள்ளது.

## மலையக மக்கள் கேள்விக்கு திணறும் வேட்பாளர்கள்

மலையகத்தில் வாக்கு கேட்கச் செல்லும் வேட்பாளர்களிடம் மக்கள் கேள்விக்கணைகளை தொடுப்பதாகவும், இதற்கு பதிலளிக்க முடியாத வேட்பாளர்கள் பிரசாரம் செய்யாமல் திரும்பி வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் தோட்டப் பகுதி ஒன்றுக்கு சென்ற வேட்பாளர் ஒருவரை வாகனத்திலிருந்து இறங்கவிடாமல் மக்கள் முன்பு தமக்களித்த வாக்குறுதிகள் என்னவாயிற்று என்று கேட்டபோது, அவ் வேட்பாளர் பதிலளிக்க முடியாமல் திரும்பியதாகவும், இதையடுத்து மக்கள் பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்ததாகவும் தெரியவருகிறது.

இதேபோல், இன்னொரு பகுதியில் குறிப்பிட்ட வேட்பாளர் ஆதரவாளர்களுடன் வருகிறார் என்பதை அறிந்த மக்கள் தமது வீடுகளுக்குள் சென்று தாளிட்டுக் கொண்டனர். வேட்பாளர் வீடுகளில் முன்னின்றும் ஒருவரும் வெளிவராத நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பியதாகவும் தெரியவருகிறது.

## ஐ. தே. கவிலிருந்து சஜித் விலகமாட்டார்

(கொழும்பு)

சஜித் பிரேமதாசா, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி வேறு கட்சியில் சேரப் போவதாக கூறப்படுவது வெறும் வதந்தி என ஹேமா பிரேமதாசா கூறியுள்ளார்.

இது தேர்தல் காலம், தங்களுக்குச் சாதகமான வகையில் வதந்திகளை உருவாக்க சிலர் முயல்வார்கள். இவற்றை மக்கள் நம்பவேண்டாம். நாங்கள் ஐ.தே.கவிலிருந்து விலகி ஒருபோதும் துரோகம் செய்யமாட்டோம் என மேலும் கூறினார்.

எனினும் ஐ.தே.கவுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்வது தொடர்பாக இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## போலி இலக்கத்தகடுகளை ஏற்றிவந்த வாகனம்

(கொழும்பு)

போலி வாகன இலக்கத் தகடுகளை பெருந்தொகையாக ஏற்றி வந்த ''பிக்அப்'' வாகனமொன்று அனுராதபுரத்தில் வைத்து பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தேர்தல் வன்செயல்களின் போது இவை பயன்படுத்தப்பட எடுத்து வரப்பட்டிருக்கலாமென கருதப்படுகிறது. போலி இலக்கத் தகடுகள் கொண்டு வரப்பட்ட பிக்அப் வாகனம், அனுராதபுரத்தைச் சேர்ந்த பிரபல அமைச்சரொருவருக்கு சொந்தமானது என விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக, அனுராதபுர மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியுள்ளார்.

## பல்கலை. ஊழியருக்கு ஒய்வூதியத் திட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக ஊழியருக்கு ஒய்வூதியத் திட்டம் ஒன்றை உருவாக்க அரசாங்கம் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து, அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத் தலைவர் பேராசிரியர் எபாசிங்க பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த அறிக்கைபெறப்பட்ட பின்னர், அது ஆராயப்பட்டு பல்கலைக் கழக ஊழியர்களுக்கு ஒய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 4 முகாம்கள் நீக்கம்

அம்பாறை மாவட்டத்திலுள்ள எல்லைப் புறங்களிலிருந்து நான்கு முகாம்களை சிறிலங்கா படையினர் அகற்றவுள்ளனர். எல்லையோர முகாம்கள் புலிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி இலக்காவதால் இவ்வாறு அகற்றப்படுவதாகத் தெரியவருகிறது.


யாழ். ஸ்ரீதரில்
இன்று மட்டும்! இறுதிநாளாக
பி. ப. 3.00 மணிக்காட்சியாக மட்டும்
உயிராயுதம்
போர் முரசு
JURASSIC PARK
காண்பிக்கப்படும்
(சி-9987)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சிறுகதை

# அர்ப்பணம்

வவுனியா திலீபன்

'இந்தக் காற்றைத் தானே
சுவாசிக்க வந்தேன்......
இந்த வயல் வெளியைத் தானே
தரிசிக்க வந்தேன்......
மரங்களில்
புதிய கிளைகள் ...
கிளைகளில்
புதிய இலைகள்..
மனசின் மடிப்புகளை
உரசிச் செல்லும்
சருகுகளின் சப்தம்.
கால்களுக்குத் தான்
வேர்கள் இல்லை
என் மனசுக்கு
ஆணிவேர் கூட உண்டு;
அதனால் தான்
மனசு மண்ணின் ஈரத்தில்
சில்லிட்டுக் கொண்டே
இருக்கிறது.''

பஸ்ஸிலிருந்து இறங்கி, பாதையில் கால்கள் பரவிய போது இப்படித்தான் நெஞ்சில் கவிதை முகிழ்த்தது. இதயத்திலிருந்து எழும் எண்ணங்கள் புதிய உணர்வுகளை ஏற்படுத்தின.

நீண்ட தூர பஸ் பிரயாணம். சீரழிந்துள்ள வீதி, மண்ணெண்ணெய்ப் புகை கக்கிச் செல்லும் பஸ், சிதைந்து போயுள்ள ஆசனம் எவையும் பிரயாணத்திற்கு பாதகமாக இருந்ததாக எனக்குப் படவில்லை.

பிரயாணக் களை உடம்பில் கொஞ்சம் அப்பியிருக்கிறது. ஆனால், மனசு பூரிப்பில் பூத்திருந்தது.

மணல் வீதியால், நான் நடந்து கொண்டிருந்தேன்.

ஒரு நாளல்ல; ஒரு வாரம் அல்ல; ஒரு மாதம் அல்ல; ஒரு வருஷம். ஒரு வருஷத்திற்குப் பிறகு ஊருக்குத் திரும்பி வருகிறேன். ஒரு மனிதனின் ஜீவித நோக்கம் அம்மனிதனின் வாழ்வை இடம்பெயர்ச்சி செய்து விடுகிறதே என மனம் எண்ணமிட்டது.

ஊர் கொஞ்சம் வித்தியாசமாகியுள்ளது. சின்னச் சின்ன மாற்றங்கள் தெரிந்தன.

புதிதாகச் சில கடைகள்... புதிதாகச் சில குடிசைகள்.. புதிதாகச் சில செடிகள்... சில வீடுகள் சேதமடைந்திருந்தன ... சில மரங்களின் கிளைகள் ஒடிந்திருந்தன......

வீதியில் சில அந்நிய முகங்கள்......

வித்தியாசமாக என்னில் மொய்க்கும் பார்வைகள்...

என் பின்னால் மோட்டார் சைக்கிள் ஒன்று உறுமிக் கொண்டுவரும் சப்தம். நான் ஓரமானேன்.

மோட்டார் சைக்கிள் என்னருகில் நின்றது. நான் தலை திருப்பிப் பார்த்தேன்.

அட! நிருபன்.

இயக்க உறுப்பினன், போராளி, பொறுப்பாளன்.

என் முகம் மலர்ந்த சமயம் அவன் முகமும் மலர்ந்தது.

நான் ஊரில் இந்த லீவுப் பயணத்திற்குள் சந்திக்க வேண்டும் என பட்டியலிட்ட சிலருக்குள் நிருபன் முதன்மையானவன்.

''என்ன திடீர் எண்டு ஊரை நினைச்சிருக்கிறியள் போல கிடக்கு.....''

இப்படித்தான் அவன் பேச்சிருக்கும். சிந்தையில் பட்டதை வார்த்தையில் கொட்டுவான். ஒருவார்த்தையில்... ஒரு புன்னகையில்...... ஒரு பார்வையில் நிருபன் சக மனிதருக்குள் ஐக்கியமாகி விடுவான்.

இந்திய இராணுவ காலத்தில் -

நிருபன் - என் ஊரை உள்ளடக்கிய ஒரு பிரதேசத்திற்கு - ஏதோ ஒரு துறைக்கு பொறுப்பாளனாகஇருந்தான் என்ஊருக்கு அவன்வரும்பொழுதுகளில் நாய்கள் குரைப்பதையும் .. மயில்கள் அகவுவதையும்அவதானித்துக்கொண்டிருக்கும் வேலைக்கு நானே என்னைப் பொறுப்பாளனாக்கிக் கொண்டேன்.

இப்படித்தான் நாம் நட்பானோம்.

இராணுவம் வீதியால் செல்லும் வேளைகளில்-நான் வியர்வைப் பிசுபிசுப்பில் கட்டிலுக்குக் கீழே படும் அவஸ்தையை அவன் அம்மா மூலம் தெரிந்திருக்க வேண்டும்.

ஒரு நாள் இதைச் சொல்லி அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

இதன் பிறகு-

நிருபனுடனேயே இரவுகளில் கிளம்பிவிடுவேன்.

காட்டில் ... நடுநிசி .. மரங்களின் கீழே படுத்துக் கொள்வோம். வேறு போராளிகளும் உடன் இருப்பார்கள்.

இவ்வாறுதான் இருவரின் நட்பு அடர்த்தியானது. இரண்டாவது ஈழப் போரின் பிறகு நாம் மேலும் ஐக்கியமானோம்!

இதனால்-

அடிக்கடி நிருபனின் பிரதேசக் காரியாலயத்திற்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது.

''எங்களை மறந்திட்டியளோ...''

நிருபன் புன்னகையுடன் கேட்டான்.

மறப்பதா? யாரை...? அவனையா...?

எத்தனை கனவுகளில் அவன் முகம் காட்டியிருக்கிறான். இதை அவனிடம் சொல்ல முடியுமா? சொன்னால் - நம்புவானா... நம்புவான்... என் மனசு அவனுக்குத் தெரியும்.

நான் புன்னகைத்தேன்.

''தர்சன் ... பின்னுக்கு ஒரு வாகனம் வருது... ஏறி வாங்கோ...''

நான் தலையசைத்தேன்.

நிருபன் கூறிவிட்டு - பழைய அதே புன்னகையைச் சிந்திவிட்டு மோட்டார் சைக்கிளில் விரைந்தான். அதே வேகம்...முக்கிய காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்கிற தவிப்பு...ஏற்றுள்ள பொறுப்பை சரியாகச் செய்து முடிக்க வேண்டும் என்கிற துடிப்பு...

வாகனத்தில் ஏறி, நிருபனின் பிரதேசக் காரியாலயத்திற்குள் புகுந்த போது-

''அண்ணை உங்கட பெயர் தானே தர்சன்?''

போராளி ஒருவனின்வினா!

''ஓம்...''

''நிருபன் அண்ணை சொல்லிப் போட்டுப் போயிருக்கிறார். உங்களை இருத்தி வைக்கட்டுமாம். தான் அலுவல் ஒண்டு பார்த்திட்டு வாறதெண்டு...''

கழுத்தில் குப்பி தொங்கும் நூலை பிடித்துக் கொண்டு அவன் பேசினான்.

நான் அமர்ந்தேன்.

மறு நிமிஷம் தேநீர் வந்தது.

சட்டென்று - என்னுள் முரளியின் ஞாபகம் முளைவிட்டது. இந்தக் காரியாலயத்தில் தான் அவனை நான் முதலில் கண்டேன்.

பதின்மூன்று அல்லது பதினான்கு வயதுதான் அவனுக்கிருக்கும். கருமை நிறம். நெஞ்சைத் துளைத்து இருதயத்தை படம் பிடிக்கும் பார்வை... எந்நேரமும் வெள்ளையாய்ச் சிரிக்கும் இயல்பு.

**"பதின்மூன்று அல்லது பதினான்கு வயதுதான் அவனுக்கிருக்கும். கருமைநிறம். நெஞ்சைத் துளைத்து இருதயத்தை படம் பிடிக்கும் பார்வை. எந்நேரமும் வெள்ளையாய்ச் சிரிக்கும் இயல்பு..."**

நான் - நிருபனை சந்திக்க வந்து போகும் போதெல்லாம் என்னுடன் வந்து பேசுவான்.

''அண்ணை இந்தாங்கோ ரீ. ''குடியுங்கோ ..'' என உபசரிப்பான்.

எங்கே அவன்? கண்களில் படவில்லையே...

அவன் முகம், நெஞ்சில் ஆழமாகப் படிந்து விட்டதை என்னால் உணர முடிந்தது.

ஒருதடவை,

நிருபனுடன் நான் பேசிக் கொண்டிருக்கும் போதுதான் கேட்டேன் -

''தம்பி... இயக்கமோ...'' என

''இல்லை இயக்கத்திலை சேர வந்திருக்கிறார்...''

நான் முரளியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது -

''மோட்டார் சைக்கிளிலை போகேக்குள்ள... தாயும், தகப்பனும் என்னை மறிச்சு, இவரை இயக்கத்திலை சேர்க்கும்படி என்னிடம் ஒப்படைச்சினம்..'' என சாதாரணமாகச் சொன்னான் நிருபன்.

நான் அந்த முகமறியாப் பெற்றோரின் அர்ப்பணிப்பு உணர்வைப் பற்றி அசை போடத் தொடங்கினேன்.

பிறகு ஒருநாள்.

''முரளி . ... கொப்பியைக் கொண்டு வாரும். பாப்பம்'

நிருபனின் உத்தரவை அடுத்து முரளி பாடக்கொப்பியுடன் வந்தான்.

முரளி சென்றவுடன்-

''கெட்டிக்காரன்...... படிச்சால் நல்லதுதானே.....''

என்றான் நிருபன்.

இன்னொருநாள்,

நிருபனைச் சந்திக்க வந்திருந்த போது-

அச்செயலகத்தின் வளவில் உள்ள மாமரம் ஒன்றின் கிளையில் முரளி நின்றான். மரத்தில் காய்கள் இல்லை. முரளி என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தான்.

உள்சென்று-

நிருபனுடன் பேசிக்கொண்டிருக்கும் போது கேட்டேன்.

''முரளி மரத்திலை என்ன செய்யிறான்......?''

''பணிஷ்மென்ட் செய்யிறான்......''

''அப்படியாய் தெரியேலையே......''

''ஏன்?''

''சிரித்துக் கொண்டேல்லோ நிற்கிறான்......''

''அவனுக்கு பணிஷ்மென்ட் என்றால் பிடிக்கும்.''

''ஏன்?''

''அவன் இயக்கம் மாதிரித்தான் தன்னைநினைக்கிறான் அல்லது இயக்கம் ஆகவேண்டும் எண்டு நினைக்கிறான். அதனால பணிஷ்மென்ட் அவனுக்கு பிடிக்குது......''

நிருபன் சிரித்தபடிசொன்னபோது - நான் பிரமித்துப் போனேன். வயது கொஞ்சம். மன வலிமை பெரியது. எதிரியை எதிர்கொள்ள வேண்டும் என்கிற கனவு பெரியது.

''தர்சன்' என நிருபன் என்னை அழைத்தபோது அவன் குரல் வித்தியாசமாக. அடைத்து ஒலித்தது.

''ராத்திரி...வெளி அலுவல்கள் பார்த்துப் போட்டு இஞ்சை வந்தபோது-முரளி என்னை கட்டிப்பிடிச்சுஅழுதான். 'ஏன்டா அழுறாய்' எண்டு கேட்டன். தன்னை இயக்கத்திலை சேர்த்து விடும்படி சொன்னான். நான் சொன்னன் 'நீ இப்பவும் இயக்கம்தானே' எண்டு. அதுக்கு அவன் தனக்குக் குப்பி இல்லை எண்டான். என்ரை குப்பியை அவன்ரை கையிலை குடுத்தன். றைபிள் இல்லை எண்டான். என்ரை றைபிளை அவன்ரை கையிலை குடுத்தன். பிறகும் அழுதான்.

'ஏண்டா அழுறாய்' எண்டு கேட்டன்.. இதெல்லாம் உங்கட எண்டான். அதுதான் உனக்குத் தந்திருக்கிறன் தானே எண்டன்... பிறகு யோசித்துப் போட்டு சொன்னான். தான் இன்னும் றெய்னிங் எடுக்கேல்லையாம் ..

'நான் சொன்னன் நீ நல்லாய்ப் படி... பிறகு றெய்னிங்கிற்கு அனுப்புறன் எண்டு...' பிறகும் இரவு முழுவதும் அழுது கொண்டேயிருந்தான்......''

நிருபன் பெருமூச்சொன்றை ஊதிவிட்டு -

''இப்பத்தான்தெரிஞ்சுது... நேற்று அவன் பள்ளிக்கூடம் போகேலை என்பதும் ஹோம் வேர்க் செய்யேலை என்பதும்... அதுதான் தம்பி பணிஷ்மென்ட் செய்கிறார்...''

மோட்டார் சைக்கிள் சப்தத்தில் முரளியின் ஞாபகம் கலைந்தது. நிருபன் புன்னகைத்தபடி இறங்கினான். எழுந்து நின்ற என் முதுகை தடவியபடி,

''எப்படி சுகமாய் இருக்கிறீர்களா...?'' என்று கேட்டான்.

நானும் அவன் சுகத்தை விசாரித்தேன்-

''ஒரு முக்கியமான அலுவலாக ஓடித் திரிஞ்சனான். உங்களை மினக்கெடுத்திப் போட்டன் போலை. கோபிக்காதைங்கோ...'' என்று அருகில் அமர்ந்தான்.

நிருபனின் குரலில் உள்ள கனிவு என்னை புளகிக்க வைத்தது.

பழைய கதைகள் பேசினோம்.

அன்றைய போராட்ட சூழ்நிலை, அதன் தாக்கம்... மக்களின் தற்போதைய உணர்வு என்பவற்றை எல்லாம் பற்றி பேசினோம்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் இடம்பெற்ற சில கொடுமையான சம்பவங்களை ஞாபகித்தோம்.

பேசிக் கொள்கிற விஷயத்தைப் பொறுத்து நிருபனின் முகம் மாற்றமடைந்துகொண்டிருந்தது. சிலசமயம் சிரிப்பான்.சிலசமயம் சிந்திப்பான், சிலசமயம் கண்கலங்குவான். அண்ணாந்து பார்த்து யோசிப்பான்...

முரளியின் ஞாபகம் மீண்டும் நெஞ்சில் முகாமிட ''நிருபன்... எங்கை முரளியைக் காணேலை...'' என்று அவனைச் சந்திக்கும் ஆவலுடன் கேட்டேன்.

நிருபனின் முகத்தில் இருந்த மலர்ச்சி திடீரென விடைபெற்றுச் சென்றதை அவதானித்தேன்.

''ஆளைப் பார்க்கப் போறியளா?'' என்று அவன் கேட்டான்.

நான் தலையசைத்தபோது-

''வாங்கோ... பார்ப்பம்'' என்று கூறி முன்னே சென்ற நிருபனின் பின்னே நான் நடந்தேன். புதிதாக அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்த இடம் ஒன்றின் உள்ளே அவன் புகுந்தான்.

(11ஆம் பக்கம்பார்க்க)

# கொழும்பில் தமிழர் பிரதிநிதித்துவம் இன்றைய நிலையில் எத்தகைய சாத்தியமானது

தனி மனிதனின் வாழ்க்கைக் காலப்பகுதியில் பதினொரு வருடங்கள் என்பது மிக நீண்டகாலமாக இருக்கலாம். மனிதனின் சுமாரான ஆயுட்காலத்தைக் கவனத்திலெடுத்துப் பார்க்கும் போது பதினொரு வருடம் என்பது அண்ணளவாக ஐந்தில் ஒரு பங்காக அல்லது ஆறில் ஒரு பங்காக இருக்கக் கூடும். ஆனால், ஒரு மக்கள் தொகுதியின் - ஒரு சமூகத்தின் - ஒரு இனத்தின் வரலாற்றில் பதினொரு வருடங்கள் என்பது ஒரு குறுகிய காலப்பகுதி தான். அதிலும் மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக அந்நியர்களின் ஆட்சிக்கு உட்பட்டு சுய அடையாளத்தை இழந்த தமிழினத்தின் வரலாற்றில் பதினொரு வருடம் என்பது மிக குறுகிய காலப் பகுதியே. ஆனால் இந்த மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் - தமது கண்முன்னே கண்ட - தாமே நேரே அனுபவித்த - சம்பவங்களிலிருந்து பாடங்களையும், படிப்பினைகளையும் பெற்றுக் கொள்ளாதவர்கள் அரசியலின் அரங்கில் மக்களின் பிரதிநிதிகளாக மகுடம் சூடிக் கொள்ள முனைவது தான் விந்தையானது.

சுமார் பதினொருவருடங்களுக்கு முன் 1983-ன் இதேமாதத்தில்- இதேநாட்களில் கொழும்பிலும், சிறிலங்காவின் ஏனைய பகுதிகளிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தத்தம் உடமைகளை இழந்தும் கைவிட்டும் தத்தம் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள திக்கெட்டும் சிதறியோடியது இலகுவில் மறந்துவிடக்கூடியதல்ல. குறிப்பாக கொழும்பில் மையம் கொண்டிருந்த தமிழர் தரப்பு அரசியல் சக்திகள் பலவும் ''இலங்கையின் இனப் பிரச்சினை என்பது உயிருக்கும், பாதுகாப்புக்கும் உத்தரவாதம் இல்லாத நிலையே'' என்று முனகிக் கொண்டு தங்கள் தளத்தை மாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டது நினைவில் இருந்து இலகுவில் அழிந்து போய் விடக்கூடியதும் அல்ல. வெலிக்கடைச் சிறைச்சாலையிலும், இதர பகுதிகளிலும் தமிழர்கள் சிந்திய குருதியின் ஈரம் வரலாற்றின் பக்கங்களில் இன்னமும் காய்ந்து போய் விடவில்லை. சிறிலங்கா அரசு தமிழர்களின் உரிமைகளை மட்டுமல்ல அவர்களின் இருப்பைக்கூட அங்கீகரிக்கவில்லை என்பதும், இனப்படுகொலை செய்வதே அதன் திட்டம் என்பதும் அம்மணமாக அம்பலமாகியது விழித்திரைகளில் இருந்து அதற்குள் மறைந்து போய் இருக்க முடியாது.

ஆனால் கொழும்பில் வாழும் தமிழர்களுக்கு சிறிலங்காப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் தேவை யென முழக்கிக் கொண்டும்- சிறிலங்காப் பாராளுமன்றத்தில் ஒருசில ஆசனங்களைப் பிடிப்பதன் மூலம் தமிழர்களின் அரசியல் தலைமைப் பாத்திரத்தை தாமே தக்க வைத்துக்கொள்ளலாம் எனக் கனவு கண்டு கொண்டும் - தமிழர்களின் தாயகப்பகுதி விடுவிக்கப்படுகிறதோ இல்லையோ தென்பகுதியில் ஒரு தொகுதி தமிழர்கள் வாழத்தான் போகிறார்கள் என்றும் அவர்களுக்காக ஒரு பிரதிநிதித்துவம் தேவை என்றும், தமது நோக்கங்களுக்கு சமாதானம் தேடிக் கொண்டும் வாக்கு வேட்டைக்களத்தில் பிரபலங்கள் சில புகுந்து கொண்டிருக்கின்றன. கொழும்பில் நடத்தப்பட்டு வரும் இந்த வாக்கு வேட்டை குறித்து அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லைத்தான். எனினும் ஒட்டுமொத்தமான தமிழர்களின் குரலாக இவர்கள் தம்மை இனங்காட்டிக் கொள்ள முற்படும் விந்தை தான் இங்கு பரிகசிக்கத்தக்கது ஆகும்.

## கொழும்பில் தமிழர்களின் அரசியல் பிரதிநிதித்துவம்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் கொழும்பில் தமிழர்கள் செல்வாக்குடன் இருந்தது உண்மை தான். இலங்கைத் தேசிய காங்கிரஸை நிறுவியவரான பொன்னம்பலம் அருணாசலம், கொழும்பு தமிழர்களுக்காக சட்ட சபையில் இடம் ஒதுக்க வேண்டுமென கோரியதும், அப்போதே அவரது சிங்கள சகாக்களால் அது நிராகரிக்கப்பட்டதும் இங்கு நினைத்துப் பார்க்கக் கூடிய ஒன்றாகும். எனினும் 1924 ல் அருணாசலத்தின் மகனான மகாதேவா கொழும்பிலிருந்து 168 வாக்கு வித்தியாசத்தில் தெரிவு செய்யப்பட முடிந்தது. ஆனால் 1931 ல் டொனமூர் அரசியலமைப்புதொகுதி வாரிப் பிரதிநிதித்துவத்திற்குவழிசெய்த போது மகாதேவா தமது பிரதிநிதித்துவத்தை உறுதிப் படுத்த வடக்கு நோக்கித் தான் ஓடிவர வேண்டி ஏற்பட்டது. 1932 ல் டாக்டர் இரத்தினசோதிசரவணமுத்துவும், 1936 ல் அவரது மனைவியான திருமதி நேசம் சரவணமுத்துவும் கொழும்பு வடக்கு தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர் தான்.

**இளையவன்**

அதேபோல 1937ல் இரத்தினசோதி சரவணமுத்துவும், பின்னர் டாக்டர் குமரன் இரத்தினம், அதிகார் செல்லமுத்து, ருத்ரா போன்றோரும் கொழும்பு மாநகர முதல்வர்களாக இருந்துள்ளனர் எனினும் இலங்கைத் தீவில் தமிழர்களின் உரிமைக் குரலின் பிரதிநிதிகளாக இவர்களால் செயற்பட்டிருக்க முடியவில்லை என்பது கண்கூடு. இதனாலேயே இத்தகையவர்களின் பெயர்கள் இப்போது தூசு படிந்து மறைந்து போயிருப்பது வெளிப்படை.

## இன்றைய நிலை:

சிறிலங்கா தனது பத்தாவது பாராளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான தேர்தலில் முனைப்பாக ஈடுபட்டுள்ள இன்றைய நிலையில் பதவியைக் கைப்பற்றுவதற்காக தமிழ் வாக்குகளைக் கவருவதில், ஆளும் ஐ. தே. கவும் எதிரணியான பொது மக்கள் ஐக்கிய முன்னணியும் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றன. ஆளும் ஐ. தே. கவின் பட்டியலில், இ. தொ. காவின் சார்பாக இந்து கலாசார அமைச்சர் டி. பி. தேவராஜும், ஆர். யோகராசனும் இடம் பிடித்துள்ளனர். அதேபோல எதிரணியான பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பட்டியலில் முன்னாள் அமைச்சர் செல்லச்சாமியும், முன்னாள் பிரதம நீதியரசரும், முன்னாள் பாராளுமன்றஉறுப்பினருமான ரி. டபிள்யூ. ராஜரத்தினத்தின் ஒரே புதல்வரான ரி. சி. இராஜரத்தினமும் இடம் பெற்றுள்ளனர். விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் விருப்பு வாக்குகள் அதிகம் பெறுவோரே தெரிவு செய்யப்படுவார்கள் என்ற நிலையைக் கவனத்திற் கொண்டு பார்த்தால், கொழும்புமாவட்டத்திலுள்ள தமிழ் வாக்காளர்கள் ஒட்டு மொத்தமாக இந்த இரண்டு அணிகளில் ஏதும் ஒன்றை ஆதரித்தால் கூட இப்பட்டியல்களிலிருந்து தமிழர்கள் தெரிவு செய்யப்படும் சாத்தியம் மிகக் குறைவு. ஏனெனில் தமிழ் வாக்காளர்கள் தமது விருப்பு வாக்குகளில் இரண்டை தமிழர்களுக்கு செலுத்தினாலும் கூட மூன்றாவது வாக்கை சிங்களவருக்கு அல்லது முஸ்லீமிற்கே செலுத்த நேரிடும். ஆனால் ஒரு சிங்கள வாக்காளனோ அல்லது முஸ்லிம் வாக்காளனோ தமிழரான வேட்பாளர் ஒருவருக்கு தமது விருப்புரிமை வாக்கை வழங்க முன் வருவார் என்று இன்றைய நிலையில் எதிர்பார்ப்பது அரசியல் முட்டாள்தனமே எனலாம். இவ்வகையில் பார்க்கும் போது ஐ. தே. கவிற்கு அல்லது பொ. ஐ. முவிற்கு வழங்கப்படும் தமிழரின் வாக்குகள் அக் கட்சிகளைப் பலப்படுத்த உதவுமேயன்றி தமிழர்களைத் தெரிவு செய்வதற்கு உதவப் போவதில்லை.

அவ்வாறு இல்லாமல் இவர்கள் யாராவது தெரிவு செய்யப்பட்டால் அது ஒரு அரசியல் விபத்தாகவே இருக்கும்.

இதே வேளை தமிழ்க் காங்கிரஸ் தலைவரான குமார் பொன்னம்பலம் தமது தலைமையில் சுயேட்சைக் குழுவொன்றை தேர்தலின் வாக்கு வேட்டைக் களத்தில் ஈடுபடுத்தியுள்ளார். கொழும்புத் தமிழர்களின் நடவடிக்கைக் குழு என்பதன் பெயரால் தோற்றுவிக்கப்பட்ட இச் சுயேட்சைக் குழுவின் மீது உதயசூரியனின் கீற்றுக்கள் சிலவும் பட்டுள்ளது. யாழ்ப்பாணத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரனின் பாரியார் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் உட்பட மூவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பாக குமாரின் குழுவில் இடம் பிடித்துள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் வாழும் 12. 35,266வாக்காளர்களில் ஐந்துசத விகிதத்தினர் அதாவது சுமார் 65,000 வாக்குகளை இக் குழு பெற்றுக் கொள்ளுமானால் தமிழர் ஒருவர் சிறிலங்கா பாராளுமன்றத்திற்கு கொழும்பிலிருந்து செல்லக் கூடும்.

இவ் வகையில் 1977-ல் யாழ்ப்பாணத் தொகுதியிலும், 1982-ல் ஜனாதிபதித் தேர்தலிலும், 1989-ல் மட்டக்களப்பிலும் குமார் பொன்னம்பலத்திற்கு கிட்டாதது இம் முறை கொழும்பிலிருந்து கிடைக்கக் கூடும். எனினும்இவ்வாறுகுமார்பொன்னம்பலத்திற்கு கிடைத்து விடக் கூடாது என்பதிலும் பலர் குறியாகவுள்ளனர்.

இதனாலேயே ஐ. தே. க. எதிர்ப்பு தமிழர் வாக்குகள் ஒட்டுமொத்தமாக குமார் பொன்னம்பலத்திற்கு கிடைத்து விடக் கூடாது என்பதற்காகவே ரெலோவின் தலைமையிலானசுயேட்சைக் குழு கொழும்பில் போட்டியிடுவதற்கு ஐ. தே. க. பச்சைக் கொடி காட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. இச் சுயேட்சைக் குழு அண்மைக் காலம் வரை ஈ. என். டி. எல். எப்புடன் இணைந்து செயற்பட்டு வந்த மு. கனகராஜா, யாழ் மாநகர முன்னாள் பதில் மேயர் அலோசியஸ், எம். ஜீ. ஆர் மன்றத்தைச் சேர்ந்த தென்னரசு ஆகியோரை உட்படுத்தி பட்டியல் தயாரித்துள்ளது. ஆக கொழும்பின் மொத்த தமிழ் வாக்குகளும் ஒரே அணிக்கு மட்டுமே கிடைக்கும் சாத்தியப்பாடு வெகுவாக குறைக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டுள்ள சூழ்நிலையானது, கொழும்பிலிருந்து தமிழர் எவரும் தெரிவாவதை எதிர்பார்க்க முடியாத நிலையையே ஏற்படுத்தியுள்ளது.

# 'பாலைவனப் புயல்' அமெரிக்காவிற்கு ஏற்படுத்திய பாதிப்பு

பாலைவனப்புயலில் வெற்றி வாகை சூடியதாக மார்தட்டிக் கொண்டவர்கள் இன்று வேதனைப்புயலில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றனர். வளைகுடாப் போரில் ஆயிரக்கணக்கானவர்களைக் கொடூரமானமுறையில் கொன்று குவித்தவர்களது வாழ்வு இன்று பரம்பரையே அழியும் அளவிற்கு பின் விளைவுகளை ஏற்படுத்தி விட்டது. அமெரிக்காவையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

தன் வினை தன்னைச் சுடும் என்ற பட்டினத்தாரின் கூற்றை நூற்றுக்குநூறு மெய்ப்பித்து நிற்கின்றது உலகவல்லரசான அமெரிக்கா. எதிரி நாடுகளை அழித்திட வேண்டும் என்ற நோக்கில் அமெரிக்கா உருவாக்கிய இரசாயன ஆயுதங்களும் நச்சு வெடிகுண்டுகளும் ஈற்றில் அவர்களுக்கே ஆபத்தாக முடிந்து விட்டது.

வளைகுடாப் போரில் ஈராக்கினையே சாம்பல் மேடாக் கிடக்கங்கணம் கட்டி களத்தில் குதித்திட்ட லட்சக்கணக்கான அமெரிக்க இராணுவத்தினரில் ஒருவர் தான் ஆல்பக். உடல்நிலை காரணமாக இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர். போரிலிருந்து திரும்பிய அவர் ஓராண்டு காலம் வரை மட்டுமே நலமுடன் வாழ்ந்தார். அதன் பின்பு அவரது உடலெங்கும் புள்ளிகள் விழத்தொடங்கிவிட்டன. கண்கள் வீங்கி விட்டன. உதடுகள் கூடத் தடித்துவிட்டன. தீவிர சிகிச்சைக்குப் பின்பு ஒருவழியாகக் குணப்படுத்திக் கொண்டார். இது மாறியதும் மாறாததுமாக அவரது எலும்பு மூட்டுக்கள் எங்கும் கடுமையாக வலி எடுக்கத் தொடங்கி விட்டன.

''காலையில் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவே முடிவதில்லை. அடித்துப் போட்டாற் போல் உள்ளது. உடம்பின் எந்த ஒரு பகுதியையும் கூட என்னால் அசைக்கவே முடியவில்லை. அப்படியொரு வலி'' என்கிறார் ஆல்பக். இவற்றையெல்லாம் விடக் கொடுமையான ஒரு விடயம் - இவரால் இனி மேல் ஓடவே முடியாது என்பது தான்.

இன்றைய இவரது நிலையால் இவர் மனைவி கூட உளரீதியாகப் பாதிப்பிற்குள்ளாகியுள்ளார். இவருக்கு அடிக்கடி தலைவலி, உடலெங்கும் அரிப்பு மற்றும் பலவகையான உடற் கோளாறுகளுக்கும் ஆளாகியுள்ளார்.

இவர்களை விட இவர்களது பதினைந்து மாதக் குழந்தை கூடபலவகையான நோய்களால் அவதியுறுகின்றது. ஆல்பக்ஒருவருக்கு மட்டுமல்ல இந்தப்பிரச்சினை! 1991-ல்வளைகுடாப் போரில் பங்குபற்றிவிட்டு ஊர்திரும்பியிருக்கும் பல்லாயிரக் கணக்கான அமெரிக்க போர் வீரர்களும் இதே போன்றே பல்வேறு வகையான நோய்களுக்கும் உள்ளாகி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஈராக்கின் ஆக்கிரமிப்பிற்குட்பட்டிருந்த குவைத்தை மீட்டிட நடந்த இந்த வளைகுடாப் போரில் அமெரிக்கப் படைகளே முன்னணி வகித்தன. அங்கு ஈராக்கியப் படைகளுடன் நடந்த மோதலில் இரசாயன ஆயுதங்களின் பாதிப்புக்கு இவர்கள் ஆளாகியிருக்கக் கூடும்எனப் பலரும் இன்று குற்றம் சாட்டுகின்றனர். ஈராக்கிற்கு இது போன்ற இரசாயன ஆயுதங்களை வழங்கியவர்களே இந்த வல்லரசு நாடுகள் என்பது தான் இங்கு ஒரு முக்கிய விடயமாகின்றது.

'வளைகுடாப் போர் பாதிப்பு' என்றே இந்தப்பாதிப்புக்குப் பெயரிடப்பட்டு, அமெரிக்கா முழுவதும் இப்போது பலரும் கவலையுடன் பேசும் ஒரு விஷயமாகி விட்டது. முன்னாள் இராணுவத்தினருக்கென இருக்கும் அரசின் நலவாழ்வுத்துறை இவர்களின் குறைகளை முதலில் கவனிக்கவில்லை. கோபத்துடன் இவர்கள் வெள்ளை மாளிகை நோக்கிப் பெரும் ஊர்வலத்தை நடத்தியதால் தற்போது ஓரளவிற்குப் பலன் கிடைத்தது.

இவர்களுக்குப் பல புதிய நோய்கள் வருவதுடன், புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறதாம் ஆனால், அரசுத்தரப்பில் செய்யப்

(11ஆம் பக்கம் பார்க்க)